உ

சிவமயம்.

# சைவாநுட்டானவிதி.

இதில்
அநுட்டான முத்திரா லட்சணமும்,
முத்திரா லட்சணமும்,
முத்திரைகளின் படங்களும்
சேர்ந்திருக்கின்றன.

---

இஃது
பஞ்சாக்ஷரபுரம்
உயர்திரு
வாலையானந்த சுவாமிகளால்
எழுதப்பெற்று,

சென்னை திருவல்லிக்கேணி
சோல்டன் கம்பெனியாரால்,
தமது பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

---

*All right reserved*

1929

...] [ரு. 1—8—0.

R.673
N28
85569

1462
1-29

உ

சிவமயம்.

# சைவாநுட்டானவிதி

இதில்

அநுட்டான முத்திராலட்சணமும்,

முத்திராலட்சணமும்,

முத்திரைகளின் படங்களும்

சேர்ந்திருக்கின்றன.

இஃது

பஞ்சாக்ஷரபுரம்

உபர்திரு

வாலையானந்த சுவாமிகளால்

எழுதப்பெற்று,

சென்னை திருவல்லிக்கேணி

சோல்டன் கம்பெனியாரால்,

தமது பதிப்பகத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

*All rights reserved*

1928

இதன் விலை] [ரு. 1—[illegible]—0.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
18 MAR 1929

85569

உ

சிவமயம்.

# நூன்முகம்.

---

கடவுளருளிய பிறப்புக்களில் மனிதப் பிறப்பே சிறந்தது என்பதை யாவரும் அறிவர். அப்பிறப்பில் கடவுளை விதிப்படி வழிபட்டுச் சித்தாந்த முத்தியைப் பெறுவதே கடன். அதனைப் போதிக்கும் சமயம் சைவசமயம். ஏனைய சமயங்களனைத்தும் இதனுளடங்கும்.

சைவசமயம், கடவுள் ஒருவரே என்றும், அவர் சிவபிரான் என்றும், அவரால் உயிர்கள் சிருட்டிக்கப் பட்டனவன்று என்றும், உயிர்கள் அநாதியாகவே பந்தமுற்றுள்ளன வென்றும், சிவபிரான் தமது பெருங்கருணையால் மாயையிலிருந்து உடல் முதலிய துணைப் பொருள்களைச் சிருட்டித்து அவற்றால் உயிர்களுக்கு இயல்பாகவுள்ள அறிவிச்சை செயல்களை விளக்குகின்றாரென்றும், அப்போது உயிர்கள் புறப்புறச் சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், அகச்சமயம் எனும் நால்வகைச் சமயங்களை முறை முறையாக வடைந்து முடிவில் புண்ணிய மிகுதியால் சித்தாந்த சமயமாகிய சைவ சமயத்தை அடைந்து, சமய விசேட நிருவாண தீக்கைகளைப் பெற்று விபூதி உருத்திராக்க முதலிய சிவசின்னங்களைத் தரித்து உண்மைச் சரியை கிரியா யோகங்களை யியற்றிச் சாலோகாதி பதங்களைப் பெற்று முடிந்த சிவஞானத்தால் சிவத்துடன் இரண்டறக் கலப்பதாகிய சித்தாந்த முத்தியைப் பெறும் என்றும் கூறும்.

இத்தகைய சிறந்த சமயாசாரம் உடையவர் சைவரெனப் பெறுவர். இக்காலத்தில் சிலர் புலாற் புசிப்பை நீக்குவதே சைவமெனக் கருதுகின்றார்கள். சிவதீட்சைகளிற் சமய தீட்சையைப் பெற்று, விதிப்படி விபூதி யுருத்திராக்கங்களைத் தரித்து, உரிய காலத்தில் சந்தியாவந்தனத்தை முடித்து, சிவாலயதெரிசனஞ் செய்து, சிவனடியார்களை வழிபட்டு, சீவகாருணியத்துடன் சைவாசாரம் பேணுமவரே சைவரெனப் பெறுவர். புலால்நீக்க மொன்றானே சைவராகார்.

சமயங்களுக்கெல்லாம் தனித்தனியே சமயச் சடங்குகளுண்டு, அவற்றுள் முதன்மையாகப் பெறவேண்டுவதைப் பெருதவர் அந்தச் சமயத்தவராகக் கருதப்படார். உதாரணமாக இக்காலத்தில் நமது நாட்டில் பரவிவரும் நூதனமதமாகிய கிரிஸ்து மதத்தை எடுத்துக் கொள்வோம். ஒருவன் அந்த மதநூலைத் துறைபோகக் கற்றிருந்தாலும், ஆலய வழிபாடு முதலிய சமயக் கொள்கைகளைக் கொண்டொழுகினுலும், அந்த சமயச் சடங்காகிய ஞானஸ்நானத்தைப் பெருதொழியின், அவன் அந்த மதக்குருவாலும் பிறராலும் கிரிஸ்தவனுகக் கருதப்படான். அவ்வாறே சைவசமயத்தின் முதற் சடங்காகிய சைவ தீட்சையைப் பெருதவன் சைவனுகான். அவன் அதீட்சிதனுயிருந்து அன்புடன் சமயாசாரங்களைக் கொண்டொழுகின், பொதுப் புண்ணியனுய் மற்றொரு காலத்திலோ, மற்றொரு பிறப்பிலோ சைவனுகத் திகழ்வான். அன்பின்றி ஒப்புக்கு ஒழுகுவானேல் சமயப்பிரஷ்டனுவான். ஆதலால் விபூதிதரிக்க விரும்பிய ஒவ்வொருவரும் சமய தீட்சையைப் பெற்றே தரிக்க வேண்டும்.

சிலர் தங்களுக்குச் சிறந்த ஆசிரியன் கிடைக்காததினுல் தீட்சைகளைப் பெறவில்லை என்று கூறுகின்ருர்கள். இவர்களிஷ்டத்துக்குச் சிறந்த உணவு கிடைக்காதபோது கிடைத்தவுணவை வெறுத்துப் பட்டினியிருக்கின்ருர்களா? உடற் பற்று உயிர்ப்பற்றுக்களாலே அதனைப் புசிக்கின்ருர்களன்ருே! அங்ஙனமே இவர்களுக்குக் கிடைத்த குருவைக் கொண்டு பெருவிருப்புடன் சமயதீக்கையைப் பெருதிருப்பது சமயப்பற்றுக் குறைவினுலன்ருே?

மற்றுஞ் சிலர் சைவக்கிரிபைகள் ஒன்றொன்றுக்கும் சரியான காரணங்களைக் காணமுடியவில்லை; மூட நம்பிக்கையாகக் கொண்டொழுக முடியாதென்கின்ருர்கள். இவர்கள் தரித்திருக்கும் ஆடையிற் றீப்பற்றிக் கொண்டபோது ஆடையிற் றீப்பற்றிய காரணத்தையும், ஆடையை அழிப்பதற்குத் தீக்குள்ள ஆற்றலின் காரணத்தையும், தீயினுல் ஆடை அழியவேண்டிய காரணத்தையும், ஆடைஅழிந்தால் தங்களுக்கு நேரும் துன்பத்தின் காரணத்தையும், தரித்திருக்கும் ஆடையில் தீப்பற்றும்படி விட்ட தங்களறியாமையின் காரணத்தையும், தீயை அவிக்கும் பொருளின் காரணத்தையும், அதற்குத் தீயை அவிப்பதற்குள்ள ஆற்றலின் காரணத்தையும், அதனுல் தீ அவியப் பெறுங் காரணத்தையும் ஆராய்கின்ருர்களா? இல்லையே! உடனே முயற்சித்துத் தீயை அவிக்கின்ருர்

களே. தம்மீதுள்ள பற்று மிகுதியினாலன்றோ காரணங்காணாமல் முயற்சிக்கின்றார்கள். இவர்கள் சைவக்கிரியைகளின் காரணத்தை அறிய விரும்பி அவைகளை ஒழித்திருப்பது சமயப் பற்றுக் குறைவினாலன்றோ?

வேறு சிலர் சைவாநுட்டான விதியைப் படித்துப் பார்த்து இவ்வளவு விரிவாக வுள்ள விதியை எப்படி நாம் அநுட்டிக்க முடியும் என்று மயங்குகின்றார்கள். இவர்கள் உண்ணும் உணவை அமைக்கும் முறையையும் உண்ணும் முறையையும் எழுதிப் பார்த்தால், சைவாநுட்டான விதியினும் பெரிதாகுமே! அதைக்கண்டு மயங்கி உண்ணாதிருக்க வேண்டுமே! தமதுடற் பற்றால் அந்த விரிந்த விதியைக் கண்டும் மயங்காது விரைந்து உண்பார்களே! இவர்கள் சமயாநுஷ்டானத்தை மட்டும் விட்டிருப்பது சமயப்பற்றுக் குறைவினாலன்றோ?

இவர்களெல்லாம் தாங்கள் கெடுவதுமன்றிப் பிறரையுங் கெடுத்து மீளா நரகுக்காளாவர்.

மனிதப் பிறப்பின் அருமையையும், அதன் அநித்தியத்தையும், சைவ சமயத்தின் பெருமையையும் உள்ளவாறுணர்ந்தவர் சைவாநுட்டான மில்லாதிருக்க ஒருபோதும் மனம் ஒருப்படார்.

மேலும் அறிவுடைய மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட கடவுள் வழிபாடு, தாய்தந்தை முதலியோர் வழிபாடு, ஆசாரியர் வழிபாடு, சுற்றத்தார் வழிபாடு முதலியவைகளை விதிப்படிச் செய்யப் பழக்குவது சைவாநுட்டானமே யாதலால், அதை அநுஷ்டிக்காதவர் கடவுள் முதலியோருக்குத் துரோகிகளு மாகின்றார்கள்.

ஆகையால் ஆண்பெண் இருபாலரும் சமய தீட்சையைப் பெற்றுச் சைவாநுட்டானம் செய்ய வேண்டுவது கடமையாகும்.

இவ்வளவு முக்கியமான சைவாநுஷ்டான விதியைப் பழகுகின்றவர்களுக்குச் சந்தேக விபரீதங்கள் நேராதிருத்தற் பொருட்டு, வேண்டிய விதிகளைத் தேடி, இயன்றவரை வழுக்களைந்து, முத்திரைகளின் இலக்கணங்களையும் படங்களுடன் சேர்த்து அச்சிட்டேன். இந்த அநுஷ்டான விதியானது, விதிகளெல்லாம் நிரம்பப் பெற்றிருத்தலினாலே சமயம் விசேடமெனும் இருவகைத் தீக்ஷிதர்களுக்குமாகும். அவரவர்களுக்குரிய விதிமுறையை ஆசாரியர் மூலமாக அறிந்து கொள்ளக் கடவர்.

விடிய ஐந்து நாழிகை அளவில் நித்திரை விட்டெழுந்து முகங் கை கால்களைச் சுத்தி செய்து, தனியிடத்திருந்து விபூதியைத் தரித்துச் சிவபிரானை வணங்கி, வெளியிற் சென்று விதிப்படி அவசிய கருமத்தை முடித்துத் தந்த சுத்தி செய்து, ஸ்நானம் பண்ணி தோய்த்து உலர்ந்த வஸ்திரத்தை உடுத்தி, விபூதியை உத்தூளனமாகப் பூசிக் கொண்டு, அநுஷ்டானம் செய்ய வேண்டும்.

நோயினால் ஸ்நானம் பண்ண இயலாதவர்கள் கண்டஸ்நானமாவது செய்ய வேண்டும். அதுவும் இயலாதவர் இயன்ற சுத்தி செய்து உடைகளை மாற்றிக் கொண்டு விபூதியணிந்து அநுஷ்டானத்தைச் செய்ய வேண்டும்.

தருப்பணம் செய்கின்றபோது பிதுர் வம்சத்துக்கு வலக்கைப் பெருவிரல் நுனிகீழ் நோக்கியும் மாதாமகர் வம்சத்துக்கு இடக்கைப் பெருவிரல் நுனி கீழ் நோக்கியுந் தர்ப்பிக்க வேண்டும்.

செபம் பண்ணும் போது விதிப்படி அமைக்கப்பட்ட உருத்திராக்க மாலை கொண்டு புத்திகாமன் கீழ்நோக்கியும் முத்திகாமன் மேனோக்கியும் மணிகளைத்தள்ளி விதிப்படிக் கணிக்க வேண்டும்.

காலையில் சூரியன் உதிப்பதற்கு முன்னும், நடுப்பகலில் சூரியன் உச்சியிலிருக்கும் போதும், மாலையில் சூரியன் பாதி மறைகின்ற போதும் அநுஷ்டானம் செய்வதே உத்தமம்.

சைவக்கிரியைகள் பாவனை, கிரியை, மந்திரம் எனும் மூன்றும் சேர்ந்தன. பாவனை என்பது எண்ணம். கிரியை என்பது முத்திரைகளுடன் செய்யப்படும் செய்கை. மந்திர மென்பது எண்ணத்துக்கேற்ற கிரியைகளின் பயனைத்தரவல்ல சொற்றொடர். ஒவ்வொரு கிரியையையும் அதற்கேற்ற பாவனை மந்திரங்களுடன் செய்ய வேண்டும், பாவனையில்லாது கிரியை மந்திரங்களைச் செய்தால் அவைகள் பயனற்றனவாகும். பாவனை மந்திரங்களில்லாது கிரியைகளைச் செய்தால் தேவர்களை மகிழ்விக்காது அசுரர்களை மகிழ்விக்கும். அதனால் புண்ணியந் தேய்ந்து பாவம் வளரும். ஆதலால் பாவனை கிரியை மந்திரங்களி னுலோபமில்லாமல் அநுஷ்டானத்தைச் செய்யவேண்டும். இந்த அநுட்டான விதியில் அம்மூன்றையும் விவரமாகக் கிரியைகள் தோறும் காணலாம்.

சந்தியாத் தேவதை சிவ சத்தியே என்றும் அது அபரை, பராபரை, பரையெனும் பேத முற்று, பிராமி முதலிய சத்திகளாய் நின்று, சகல கர்மசாக்ஷிணியாய் விளங்கும் என்றும் அறியத்தக்கது.

அபரை :—பிராமி, வைணவி, இரௌத்திரி என மூன்றும்.

பராபரை :—ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி என மூன்றும்.

பரை ---இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருஷ்ணை என நான்காம். சைவர்களுக்குக் கர்மசாக்ஷி சிவசத்தியெனவும் வைதிகர்களுக்குக் கர்மசாட்சி சூரியனெனவும் கொள்ளப் பெறுவதால், வைதிக சந்தியினும் சைவ சந்தியே சிறப்புடையதாகும். ஆகையினாற்றானே சிவாகமங்களும் சிவத்துவிஜன் (ஆதிசைவன்) வைதிகசந்தி சைவ சந்தி இரண்டையும் செய்ய வேண்டும், வைதிக சந்தியை விட்டாலும் சைவசந்தியை ஒருபோதும் விடலாகாது என்று கூறுகின்றன. இதனால் வைதிகரினும் சைவர் ஏற்ற முடையவரென அறிதல் வேண்டும்.

சில சைவர்கள் திருமணம் சிரார்த்தம் முதலிய கிரியைகளைப் புறச்சமயிகளாகிய ஸ்மார்த்தர், வைணவர்களைக் கொண்டு செய்வித்துக் கிரியா பலன்களையிழந்து குற்றத்துக்காளாகின்றார்கள். சைவக் கிரியைகளைச் சைவக் குருக்களைக் கொண்டே செய்விக்க வேண்டுமேயன்றி, சைவ மந்திரங்களை யுணராதவர்களைக் கொண்டும், அதீட்சிதர்களைக் கொண்டும் புறச்சமயிகளைக் கொண்டும் ஒருபோதும் செய்விக்கலாகாது.

இந்த அநுட்டான விதியிற் காணப்படும் பிழைகளையும் அவற்றின் திருத்தங்களையும் ஆதாரங்களுடன் அறிவிப்பின் அடுத்த பதிப்பில் அவ்வாறே திருத்தி பதிக்கப்படும்.

இந்த அநுட்டான விதியை வெளியிடுவதற்குத் துணையாக விருந்து உதவிபுரிந்து ஊக்கிவந்த திருவாளர்கள்-சென்னை சோல்டன் கம்பனி உரிமையாளர்களும், இடைக்கியம் திருவாளர் இராம நடேச பிள்ளை அவர்களும், தூத்துக்குடி திருவாளர் சி. த. சிதம்பரம் பிள்ளை அவர்களும், ஆகிய சிவநேசச் செல்வர்களுக்கு எல்லாம் வல்ல இறைவனின் இன்னருளுண்டாகத் திருவருளை வழுத்துகின்றேன்.

பஞ்சாக்ஷரபுரம்
வாலையானந்தம்.

## விரல்களின் பெயர்.

| கிரந்தச்சொல். | தமிழ்ச்சொல். | வழக்கச்சொல். |
|---|---|---|
| அங்குஷ்டம் | பெருவிரல் | கட்டைவிரல் |
| தர்ச்சனி | சுட்டுவிரல் | ஆட்காட்டிவிரல் |
| மத்யமை | நடுவிரல் | பாம்புவிரல் |
| அனாமிகை | அணிவிரல் | மோதிரவிரல் |
| கனிஷ்டை | சிறுவிரல் | சுண்டுவிரல் |

——— () ———

சிவமயம்.

# அநுட்டான முத்திரா லட்சணம்.

மன்னுநடு விரன்மூன்று மடக்கிவிநா யகனை
வணங்கியுயர் சிரம்புடைத்தல் சிகாமுத் திரையா
முன்னுமிரு கரங்குவித்த னமக்கார மாகு
முயர்ந்தநடு தற்சனியு ளடக்கல்கோ கோட்ட
மென்னுமது நிரீக்கணமாம் புரோக்கணமா மதனுக்
கியன்றநீக் கணமுத்திரை தற்சனியை நிமிர்த்த
லன்னுதா டனஞ்செய்த லதோமுகியங் குலிநீட்
டங்குட்ட மடக்கலப்பி யுக்கணஞ்சோத் திகமே. (1)

அங்கைவிரற் றற்சனியு மத்திமையு நிமிர்த்த
லணிகோ விடாணமா மதுதாளத் திரயங்
தங்குதிக்குப் பந்தனநற் றற்சனியங் குட்டந்
தனைத்தெறித்தல் சோடிகா முத்திரைதா னென்பர்
பொங்குபுனற் றற்சனியால் வளைத்தலவ குண்டம்
பொருந்துமதி தீக்கணமுத் திரையாகப் புகல்வ
ரிங்கிதஞ்சேர் தேனுமா முத்திரையுஞ் செய்தே
யெழிறருமத் திரசந்திக் கியைந்தமுறை யுரைப்பாம். (2)

நலம்பெறும ணுமிகைசேர் மத்திமைதற் சனியு
நடுவளைத்தல் கோமுகமாம் புரோட்சணமற் றதனுல்
சலங்கொடுதர்ப் பணஞ்செய்தல் சங்கெனுமுத் திரைநீள்
தற்சனிமூ லத்தடியை யங்குட்டஞ் சார்தல்
துலங்கவிசை யாசமனங் கோகனமுத் திரையாஞ்
சுத்தியத ரந்துடைத்தல் பதாகையெனச் சொல்வ
ரிலங்குமிடந் தொடுதற்குச் சேட்டையணு மிகையை
யிணைந்திடுத றிவ்வியமுத் திரையென்ப தாமே. (3)

மத்திமையுந் தற்சனியு மனுமிகையுங் கூட்டி
வளருமிரு கரந்துடைத்தல் சாணமுத் திரையாஞ்
சுத்திசெய்யு மிருகரமுங் கூட்டிப்பெரு விரல்க
* டுவளுறவுள் வளைப்பதுவே பிரசன்ன மாகும்
பத்தியுற வாசனமு மூர்த்தியையு மங்கைப்
பருவிரல்கள் பதித்தலதிட் டானமுத் திரையா
முத்தமமாஞ் சேட்டையடி தற்சனியி னுனிபா
லுற்றவதுட் டினிகமென வுரைத்திடுமுத் திரையே. (4)

சிறந்தபெரு விரனுனிதான் றற்சனியி னுனியைச்
† சேர்ந்திடுதல் சின்மயமுத் திரையெனவே செப்பும்
பிறங்குபெரு விரனீண்ட மத்திமையைச் சேர்தல்
பெயர்‡மோக முத்திரையாம் பெருவிரனீள் கனிட்டை
யுறைந்திடுத லாக்கிரமா முபயகர விரன்மூன்
றுண்மடக்கிச் சேட்டைசிறு விரலிணைத்து நீட்டி
னிறைந்தகடா முத்திரையா மூவிரலுஞ் சுற்றி
னிறையான்ம லீகமென நிகழ்த்திடுமுத் திரையே. (5)

சேட்டைசிறு விரல்வளைக்க மூவிரலு நீட்டித்
திருநயனந் தொடலாக்ர கண்டமெனத் திகழு
நீட்டுமங் குலிமடக்கித் தற்சனிக ணிமிர்த்து
நிறைகவச முபயமுற நேர்தனு ராசம்
வாட்டமில னுமிகைக ளுனியங்கை தொடுதல்
வழுவினுஷ முத்திரையாம் பிராணு யாமங்
கோட்டமில்தற் சனிபடுத்த விரல்மடக்கிச் சேட்டை
கூறுமனு மிகைகூம்பல் வராகமுத் திரையே. (6)

அங்கைமடித் திடுமுட்டி யங்குட்ட மிசையே
யானதருச் சனிவளைத்த லங்குசமுத் திரையாந்
தங்குமுட்டி வலக்கரத்தை யிடக்கரத்தாற் பிடித்த
றகுகும்ப முத்திரையாஞ் சங்காரந் தானு
மிங்கிதமாய் வலக்கரத்தை முட்டியாய்ப் பிடித்த
லிருகரமு மிணைந்துநடு விரல்களிடை வெளியே
பொங்குபுனல் விடுதறிரு முத்திரையாங் கனிட்டை
பொருந்துமடி விடுதல்சபா முத்திரையாம் புகலில். (7)

---

* டுகளறவுள் வளைப்பதுவே பிரசன்னமுத் திரையாம் எனவும் பாடம்.
† சேருதல்சின் மயமுத்திரை யெனத்தெரிந்துசொல்வர்எனவும் பாடம்.
‡ யோகமுத்திரையாம் என்றும் பாடம்.

அள்ளுநீ ரிரண்டுமெணிக் கரத்தினெதிர் விடுத
லானபணு முத்திரையா மதுபூதர்க் காகுங்
* கொள்ளுமுறை பிதுராதி தர்ப்பணமங் குட்டங்
குலவுநுனி யாற்கொடுத்தல் கண்டிமுத் திரையாந்
தெள்ளுபுன லங்குட்டந் தற்சனிமூ லத்தாற்
செய்தல்குர வனுக்கதுதான் † செகண்டிமுத் திரையே
விள்ளுதம ரினமும்வலக் கனிட்டைவிர னுதியால்
விடுதலது துருவமுத் திரையாகும் விளம்பில் (8)

கூறமணு மிகைசேட்டை மத்திமையுங் கூட்டிக்
கொண்டுதிரு நீறெடுத்தல் மிருகமுத் திரையா
நீறுகுழைத் திடுவதற்குப் புனல்விடுத்தல் கனிட்டை
நீக்கிநின்ற விரல்கூட்ட னிரோதனமா மாகத்
‡ தேறும்வகை நாற்பதுமுத் திரையின்னும் பலவாஞ்
செய்யவரு மநுட்டானத் திறத்துடையோர்க் கெல்லாம்
பேறினிய கிரியைபுரிந் தங்கிலையி னிற்போர்
பெறும்பயனைப் பெறுவரெனப் பேசுமா கமமே. (9)

அநுட்டான முத்திரா லட்சணம்
முற்றிற்று.

---

* கொள்ளு பிதுர் தருப்பணங்களங்குட்ட நுனியாற் கொடுத்திடுத லகண்டின்முத் திரையாகக் குறிப்பர் எனவும் பாடம்.

† சிகண்டின் முத்திரையே என்றும் பாடம்.

‡ தேறும்வகை முப்பானென்பது முத்திரை யின்னுஞ் என்றும் பாடம்.

சிவமயம்.

# முத்திரா லட்சணம்.

| | | |
|---|---|---|
| கும்பமுத் திரை | மண்டுநீர் பிடித்த வலக்கையை யிடக்காங்<br>கொண்டுமேல் வளைப்பது கும்பமுத் திரையே. | (1) |
| தேனு முத்திரை | இருகைகள் கூட்டி யிடையிடை கோத்திடு<br>விரல்களிற் றர்ச்சனி விரல்மத் திமைகளை<br>யார்த்திடக் கனிட்டை யனுமிகை களினுற்<br>சேர்த்துறப் பிடிப்பது தேனுமுத் திரையே. | (2) |
| மகாமுத் திரை | நெடியகை யிணைகளை நிமிர்த்தெதிர் முகமுற<br>வடிமுதன் முடியளா வமைக்கின்மா முத்திரை. | (3) |
| விஸ்புர முத்திரை | கருதிணைப் பெருவிரல் கனிட்டையே முதனுல்<br>விரனுதி தொடுவது *விஸ்புர முத்திரை. | (4) |
| கோவிஷா ண மு ரை. | பிடித்தகைத் தர்ச்சனி பிறங்குமத் திமைதனை<br>விடுத்திடு வதுகோ விடாணமுத் திரையே. | (5) |
| அங்குச முத்திரை. | பிடித்தகைத் தர்ச்சனி பெருவிர லின்மிசை<br>யடுத்துற வளைத்திட லங்குச முத்திரை. | (6) |
| ஆவாகன முத்திரை | அஞ்சலி தன்னி லணிவிர லிரண்டினும்<br>† விஞ்சு மங்குட்ட ¦ மேவிலா வாகனம். | (7) |
| ஸ்தாபன முத்திரை. | மேவுமஞ் சலிதனை ‡ விரித்ததோ முகமுறத்<br>தாபனஞ் செய்வது தாபன முத்திரை. | (8) |
| சன்னி தான முத்திரை | பெருவிர லுயர்ந்திடப் பிடித்தகை முட்டிகள்<br>சருவுற விணைத்திடிற் சன்னிதா னமதாம். | (9) |
| சன்னிரோ தன மு-ரை | அன்னசன் னிதானத் தகமுறப் பெருவிர<br>றன்னையுண் $ மறைப்பது சன்னிரோ தனமே. | (10) |

* விப்புர என்றும் பாடம்.
† விஞ்சிய வங்குட்ட மெய்திலா வாகனம் என்றும் பாடம்.
‡ விரித்தெதிர் முகமுற என்றும் பாடம்.
$ மடிப்பது என்றும் பாடம்.

**பதும முத்திரை.**
பிணித்தகை விரித்துப் பெருவிர லிணைநடுப்
பணித்திடப் பிடிப்பது பதுமமுத் திரையே. (11)

**பிம்ப முத்திரை.**
பத்மமுத் திரைதகு பாணிபி னடுவிரல்
விற்பொரத் தொடுவது விம்பமுத் திரையே. (12)

**நமஸ்கார முத்திரை**
பெருவிர லிரண்டும் பிணைந்திட நிமிர்ந்தே
கரமிரண் டுறினமக் காரமுத் திரையே. (13)

**திராஸநீ முத்திரை**
பிடித்திடு வலக்கையிற் பிறங்குதர்ச் சனிநிமிர்ந்
திடக்கையி லடித்திடு மெனிற்றிரா சனியே. (14)

**சங்கார முத்திரை**
அங்குலி நான்கு மங்குட்டத் தடி
தங்குற வளைப்பது சங்காரமுத் திரையே. (15)

**சோடிகா முத்திரை**
பிடித்தகைத் தர்ச்சனி பெருவிர லின்னடுத்
துடித்திடத் தெறிப்பது சோடிகா முத்திரை. (16)

**பதாகை முத்திரை**
ஓரித் திடுகர முறநிமிர்த் தைவிரல்
பாரித் திணைப்பது பதாகைமுத் திரையே. (17)

**சங்க முத்திரை.**
தூய பதாகைச் சொற்பெரு விரனுதி
யாயதர்ச் சனிவலத் தடிதொடிற் சங்கம். (18)

**காள கர்ணிகை முத்திரை.**
உறுமிரு கைவிர லுள்ளுறக் குவித்துச்
சிறுவிரன் முதலாச் செறிந்தநால் விரலினுந்
துன்றிரு பெருவிர றொட்டுற நிமிர்ந்திடிற்
கைந்நிகழ் காள *கர்ணிமுத் திரையே. (19)

**இலிங்க முத்திரை.**
அடுத்திடு மிடக்கையி லங்குட் டந்தனைப்
பிடித்திடு வலக்கைப் பெருவிர னிமிர்த்தாங்
கசைவற விடக்கையி லங்குலி களைவளைத்
திசைவுறப் பிடித்திடி னிலிங்கமுத் திரையே. (20)

**மனோரத முத்திரை.**
இருகையங் குலிகளை யெதிர்முகத் துள்ளுறச்
செருகிய பின்னிணைச் செங்கைகள் கூட்டி
நீட்டுதர்ச் சனிக ணிமிர்ந்துறப் பெருவிரன்
மூட்டிடின் மனோரத முத்திரை யாகும். (21)

**பஞ்சமுக முத்திரை.**
தன்னினுட் கோத்தகைத் தர்ச்சனி பெருவிரன்
மன்னிய நடுவிரன் மணிச்சிறு விரல்களை
யாங்குறப் பிடித்தபின் னணிவிர லிணைநடுப்
பாங்குற † நிமிர்ப்பது பஞ்ச முகமே. (22)

---

* கர்ணிகை என்றும் பாடம். † விணைப்பது என்றும் பாடம்.

திரிசூல முத்திரை.
பெறு * காங் கோத்தபின் பெருவிர ணடுவிரல்
சிறுவிர னிமிர்ப்பது திரிசூல மாமே. (23)

மகர முத்திரை.
திரிசூ லந்தனிற் செறிந்ததர்ச் சனியிணை
மருவணு மிகையுற வளைத்திடின் மகரம். (24)

சிருக்கு முத்திரை.
காண்டகு மகரக் கனிட்டையுள் வளைந்ததைத்
† தீண்டிடிற் பெருவிரல் சிருக்குமுத் திரையே. (25)

மிருக முத்திரை.
கைவிரல் குவித்ததிற் கனிட்டைதர்ச் சனியெனு
மெய்விர னீட்டிடின் மிருகமுத் திரையே. (26)

நாராச முத்திரை.
இருகைமுட் டியினிமிர்த் திட்டதர்ச் சனிகளிற்
செருகிய பெருவிரற் றெறிக்கி ஞாராசம். (27)

திவ்விய முத்திரை.
அம்மலர் சாத்தற் கனுமிகை பெருவிரல்
செம்மையிற் செறிப்பது திவ்விய முத்திரை. (28)

உற்பவ முத்திரை.
சிறுவிர னீட்டிச் சிறந்ததர்ச் சனியுட
னுறுபெரு விரலொடி னுற்பவ முத்திரை (29)

தியாக முத்திரை.
அருந்த லளித்த லாகுதி யோம்ப
றிருந்திய விரல்குவி தியாகமுத் திரையே. (30)

நிரீக்ஷண முத்திரை.
பெருவிர லனுமிகை பிடித்ததி னடுவாற்
பரனது நோக்காய்ப் பார்த்த னிரீக்கணம். (31)

புரோக்ஷண முத்திரை.
நிரீக்கணஞ் செய்தபி னிகழ்பதா கையினுற்
புரோக்கணஞ் செய்வது புரோக்கண முத்திரை. (32)

தாடன முத்திரை.
தர்ச்சனி யதனுற் றாடனஞ் செய்வது
பொற்புறு தாடனம் புகலுமுத் திரையே. (33)

அப்பியுட் சண மு-ரை
அதோ முகமாகப் பதாகைமுத் திரையா
லப்பியுக் கணஞ் ‡ செய்வ தப்பெயர் முத்திரை. (34)

நேத்திர முத்திரை.
சேட்டை கனிட்டைமேற் சேர்மூ விரலையு
நீட்டி விரிப்பது நேத்திர முத்திரை (35)

பரிகை முத்திரை.
கைவல முதலிடக் கனிட்டைமூக் குந்தி
யெய்தவப் பெருவிர லெதிர்தொடல் பரிகை. (36)

---

* விரல் என்றும் பாடம்

† தாண்டிடிற் என்றும் பாடம்.

‡ செய்த லப்பியுக் கணமே என்றும் பாடம்.

சண்முக முத்திரை. ஆக்கினை முதனடு வணிவிரல் செவிகண்
மூக்கினை மறைத்தல் சண்முகமுத் திரையே. (37)

தாளத் திரையம். இலங்குற முக்கா லிடக்கையில் வலக்கை
* திலங்குறத் தட்டுத ருளத் திரையம். (38)

†பரிக முத்திரை. தகை ‡ வற முட்டியில் தர்ச்சனி நிமிர்த்து
பகவர்வலஞ் சுற்றுதல் $பரிகமுத் திரையே. (39)

முற்கார முத்திரை. முற்சித நான்கின் முட்டிக ணிமிர்த்த
தர்ச்சனி நுதியாற் றட்டுதன் முற்காரம். (40)

முத்திராலட்சணம்

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

# முத்திரை விதி.

---

1. சிகாமுத்திரை:—இருகைகளின் நடுவிரல்கள் மூன்றையும் முட்டியாக மடக்கி மற்றிரு விரல்களையும் நீட்டித் தலையின் இருபுறத்திலும் புடைத்தல்.

2. நமஸ்கார முத்திரை:—இரண்டு கைகளையுஞ் சேர்த்து விரல்களை இணைத்துப் பெருவிரல்கள் ஒன்றின்மேலொன்றாகப் பின்னியுற வைப்பது.

3. சம்மார முத்திரை:—வலக்கை விரல்களைச் சேர்த்து நீட்டிச் சிறுவிரல் கீழிருக்க அமைப்பது.

4. நிரீக்ஷண முத்திரை:—பெருவிரல் அணிவிரலை வளைத்துப் பிடிக்க மற்ற விரல்களை நீட்டுவது.

---

* தலங்கொடு தட்டுதல் தாளமுத் திரையே என்றும்பாடம்.

† பரியமுத்திரை என்றும் பாடம்.

‡ பெற என்றும் பாடம்.

$ பரிய என்றும் பாடம்.

4அ. கோகோட்ட முத்திரை:—சுட்டுவிரலையும் நடுவிரலையும் உள் மடக்குவது. இதுவும் நிரீக்ஷணத்துக்கு ஆகும்.

5. தீட்சணமுத்திரை:—சுட்டுவிரலை நீட்டி ஏனைய விரல்களை மடக்கிப் பிடிப்பது. இதற்குத் திராசனிமுத்திரை யென்றும் பெயர்.

6. அதோமுகி முத்திரை:—சுட்டுவிரலை நீட்டி மற்ற விரல்களை மடக்கிச் சுட்டுவிரல் கவிழ்ந்திருக்கப் பிடிப்பது.

7. சோத்திக முத்திரை:—விரல்களைச் சேர்த்து நீட்டிப் பெருவிரலை அவற்றுட னிணைத்து, கவிழ்த்துப்பிடிப்பது. இது அப்பியுக்ஷண முத்திரை யெனவும், கவிழ்ந்த பதாகை முத்திரை யெனவும் பெயர் பெறும்.

8. கோவிடாண முத்திரை:—சுட்டுவிரலையும் நடுவிரலையும் இணையாமல் நீட்டிச் சிறுவிரல் அணிவிரல்களை மடக்கி இவற்றைப் பெருவிரலால் அழுத்திப்பிடிப்பது.

9. சோடிகா முத்திரை:—விரல்களை மடக்கிச் சுட்டுவிரலால் பெருவிரல் மத்தியில் விரல்துடிக்கத் தெறிப்பது.

10. அதிதீக்கண முத்திரை:—சுட்டுவிரலை நீட்டி மற்ற விரல்களை மடக்கித் தலைகீழாகப் பிடிப்பது.

11. தேனு முத்திரை:—இரண்டு கைகளையுஞ் சேர்த்து விரல்களை இடையிடை யமைத்துச் சுட்டுவிரல்கள் நடுவிரல்களையும், அணிவிரல்கள் சிறுவிரல்களையும் நுனியோடு நுனி பொருந்த வமைத்துப் பசுவின் முலைக் காம்புபோலிருக்க அழுத்திப் பிடிப்பது.

இதைப் பிடிக்கும்போது வலது சிறுவிரலால் இடது அணி விரலையும், இடது சிறு விரலால் வலது அணி விரலையும், வலது நடு விரலால் இடது சுட்டு விரலையும், வலது சுட்டுவிரலால் இடது நடு விரலையும் நுனியோடு நுனிபொருந்த சேர்க்கவேண்டும்.

12. கோமுக முத்திரை:—நடு விரல்கள் மூன்றையும் சேர்த்துச் சற்று வளைத்து மற்ற விரல்களை நீட்டுவது.

13. சங்கமுத்திரை:—பெருவிரல் நுனியைச் சுட்டுவிரலடியிற் பொருந்த வளைத்து ஏனைய நான்குவிரல்களையுஞ் சேர்த்து நீட்டிச் சற்று வளைப்பது. இதனால் தர்ப்பிக்கும்போது அங்கையிலிருந்து விரல் நுதிகளால் நீரை விடவேண்டும். இவ்வாறுவிடுவது தேவதீர்த்தமெனப் பெயர்பெறும்.

14. கோகர்ண முத்திரை:—சங்க முத்திரையைப் பிடித்து இணைந்த நான்கு விரல்களையுஞ் சிறிது அதிகமாக வளைப்பது.

15. பதாகை முத்திரை:—ஐந்து விரல்களையுஞ் சேர்த்து நீட்டுவது. *

16. திவ்விய முத்திரை:—பெருவிரல் அணிவிரல்களைச் சேர்த்து மற்ற விரல்களை நீட்டுவது.

17. சாணமுத்திரை:—நடுவிரல்கள் மூன்றையும் இணைத்து மற்ற விரல்களை விலக்கி நீட்டுவது.

18. மிருக முத்திரை:—பெருவிரல் அணிவிரல் நடுவிரல்களை நுனிகள்பொருந்தச்சேர்த்து மற்ற விரல்களை நீட்டுவது.

19. நிரோதான முத்திரை:—சிறு விரலை நீக்கி ஏனைய விரல்களை நுனிகள் பொருந்தச் சேர்த்துக் குவிப்பது.

20. கும்பமுத்திரை:—வலக்கையை முட்டியாகப் பிடித்து இடது அகங்கையில் வைத்து, அதனை இடக்கையால் பிடிப்பது.

21. மகாமுத்திரை:—கைவிரல்கள் நீண்டிருப்பது.

21அ. விரல்கள் நீண்ட இரு கைகளாலும் பாதம் முதல் சிரசு பரியந்தம் நீவுவதுபோற் காட்டுவதும் இம்முத்திரையே.

22. சங்காரமுத்திரை:—வலக்கரத்தை முட்டியாகப் பிடித்து அதிலிணைந்த பெருவிரலை விலகாமல் உயர்த்தி நீட்டுவது. அப்போது சுட்டுவிரல் நுனி பெருவிரலடியிற் பொருந்தி யிருக்க வேண்டும்.

23. பிரசன்ன முத்திரை:—இரண்டு கைகளையும் கூப்பி இரண்டு பெரு விரல்களையும் இணைத்து, அவற்றின் நுனிகள் அணிவிரல்களின் அடியிற் பொருந்த உள்ளே மடக்குவது. இது ஆவாகன முத்திரை எனவும் பெயர் பெறும்.

24. அதிஷ்டான முத்திரை:—இரண்டுகைப் பெருவிரல்களாலும் அகங்கையை (உள்ளங்கையைத்) தொடுவது.

25. உஷ்ணீக முத்திரை:—பெருவிரல் நுனியைச் சுட்டுவிரல் நுனியாற் றொடுவது.

25அ. பெருவிரலடியிற் றொடுவதும் அம் முத்திரையே.

26. சின்மய முத்திரை:—சுட்டுவிரல் நுனியைப் பெருவிரல் நுனியாற் றொடுவது.

27. மோக முத்திரை:—நடுவிரல் நுனியைப் பெருவிரல் நுனியாற் றொடுவது. இது யோக முத்திரை யெனவும் பெயர் பெறும்.

---

* இதைக் கவிழ்த்துப் பிடிக்கின்றபோது கவிழ்ந்த பதாகை என்றும், நிமிர்த்துப் பிடிக்கின்றபோது நிமிர்ந்த பதாகை என்றும் பெயர் பெறும்.

28. ஆக்கிர முத்திரை:—சிறுவிரல் நுனியைப் பெருவிரல் நுனியாற் றொடுவது.

29. கடா முத்திரை:—இரண்டு கைகளையும் இணைத்து நடுவிரல்கள் மூன்றினாலும் அகங்கைகளைத் தொடுவது.

30. ஆன்மலீக முத்திரை:—இருகைகளின் நடுவிரல்கள் மூன்றையும் சேர்த்து ஒன்றை ஒன்றுச் சுற்றுவது.

31. ஆக்கிரகண்ட முத்திரை:—சிறுவிரலைப் பெருவிரலால் வளைத்துப் பிடித்து நடுவிரல்கள் மூன்றையும் நீட்டி விரிப்பது அவற்றுள் நடுவிரல் சற்று உயர்ந்திருக்க வேண்டும். இது நேத்திர முத்திரை எனவும் திரிசூல முத்திரை எனவும் பெயர் பெறும்.

32. நாராச முத்திரை:—சுட்டு விரல்களை நீக்கி இருகைகளையும் முட்டியாகப் பிடிப்பது. இவற்றைக் கழுத்தின் வலமிடமாகிய விருபுறங்களினிருந்து மார்பின் மத்திவரையிற் கொண்டுவர வேண்டும். இது அங்க நிபாசத்தில் வருவது.

33. உஷ முத்திரை:—ஒருகை அணிவிரலால் மற்றொன்றின் அகங்கையைத் தொடுவது.

34. வராக முத்திரை:—வலக்கை நடுவிரலை மடக்கிச் சிறுவிரலைத் தனித்து நீட்டி, மற்ற விரல்களை ஒன்றுடனொன்று பொருந்தாமல் குவிப்பது.

35. அங்குச முத்திரை:—வலக்கையை முட்டியாகப் பிடித்துப் பெருவிரலின்மேல் சுட்டுவிரலை நீட்டித் துரட்டிபோல் வளைப்பது.

36. திரு முத்திரை:—கைவிரல்களில் பெருவிரலொழிந்த மற்ற விரல்களின் இடை வெளியால் நீர்விடுவது. இவ்வாறு விடப்படும் நீர் ஆரிடதீர்த்தம் எனப் பெறும்.

37. ஊர்த்துவ முகி முத்திரை:—சுட்டு விரல்களை நீட்டி மற்ற விரல்களை மடக்கிச் சுட்டு விரல் நிமிர்ந்திருப்பது.

38. சபா முத்திரை:—இருகைகளையும் இணைத்துச் சிறுவிரல்களால் நீரை விடுவது. இது மானவ தீர்த்த மெனப் பெறும். இம் முத்திரையைச் சடா முத்திரை யென்றும் கூறுவர்.

39. பண முத்திரை:—சங்க முத்திரை கொண்ட இருகைகளையும் இணைத்துப் பெருவிரல்களொழிந்த மற்ற விரல்களைச் சற்று வளைத்து அரவின் படம்போல் அமைப்பது. இவ்வாறமைந்த கைகளிலிருந்து நீரை எதிராக மணிக்கட்டு வழியாக விடுவது பூத தீர்த்த மெனப்படும்.

40. கண்டி முத்திரை:—சங்கார முத்திரையைப்போல் விரல்களை மடக்கி நீண்ட பெருவிரல் முனையால் நீரை விடுவது. இது பிதுர் தீர்த்த மெனப் பெயர் பெறும்.

41. துருவ முத்திரை:—வலக்கைக் கனிட்டை விரல் நுனியால் நீரை விடுவது

42. செகண்டி முத்திரை:—பெருவிரல் சுட்டுவிரல்களுக் கிடையால் (அவ்விரல்களின் மூலத்தால்) நீரை விடுவது.

43. ஆவாகன முத்திரை:—இருகரங்களையும் அஞ்சலித்து அணிவிரல்களிரண்டின் அடியிலும் அங்குட்ட விரல்களின் முனைபொருந்த பிடிப்பது.

44. ஸ்தாபன முத்திரை:—நமஸ்கார முத்திரையை விரித்துக் கவிழ்ப்பது.

45. சன்னிதான முத்திரை:—பெருவிரலுயர்ந்திருக்க விரல்களை முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளையும் இணைப்பது.

46. சன்னிரோதன முத்திரை:—சன்னிதான முத்திரையில் உயர்ந்திருக்கும் பெரு விரல்களை மடித்து விரல்களினுள்ளே மறைப்பது.

47. பத்ம முத்திரை:—பிணித்த கைகளை விரித்து பெருவிரல்களிரண்டையும் நடுவில் மடித்துத் தாமரைக் காய்போலிருக்க வைத்து, ஏனைய விரல்களை ஒன்றுடனொன்று பொருந்தாமல் விரித்துச் சிறிது வளைத்து எட்டிதழ்போலிருக்கப் பிடிப்பது.

48. பிம்ப முத்திரை:—பதும முத்திரைபாகப் பிடித்த கைகளின் நடுவிரல்கள் வில்லைப்போல் வளைந்து ஒன்றை யொன்று தொடுவது.

49. விஸ்புர முத்திரை:—இருகைகளிலும் விரல்களை இணைத்துச் சிறுவிரல் முதலாக நான்கு விரல்களின் நுனிகளையும் பெருவிரல்களாற் றொடுவது.

50. காளகர்ணி முத்திரை:—இருகைகளையும் இணைத்து விரல்களைச் சேர்த்துச் சிறிது உள்ளுற வளைத்துச் சிறுவிரல்கள் முதலாக நான்கு விரல்களையும் பெருவிரல்களாற் றொடுவது. அவ்வாறு தொடும்போது பெருவிரல்கள் சிறுவிரல்களி னடியிலிருந்து சுட்டு விரல்களின் மத்திவரை போகவேண்டும்.

51. இலிங்க முத்திரை:—இடது கைப் பெருவிரலை நிமிர்த்தி அதை வலது கைப் பெருவிரலால் வளைத்துப் பிடித்து, இதை, இடது கை விரல்களை மடக்கிப் பிடித்து, வலது ்கையிலுள்ள மற்ற விரல்களைச் சேர்த்து நீட்டுவது.

52. மனோரத முத்திரை:—இரண்டு கை விரல்களையும் எதிர்முகமாகச் செருகி இருகைகளையும் கூட்டி, தர்ச்சனிகளை நீட்டி இணைத்து அவற்றின் மேல் பெருவிரல்களைச் சற்று நிமிர்த்திப் பொருந்தவைப்பது.

53. பஞ்சமுக முத்திரை:—இரண்டு கை விரல்களையும் எதிர்முகமாக உள்ளுறச் செருகி, சுட்டு விரல்களால் நடுவிரல்களையும் பெருவிரல்களாற் சிறு விரல்களையும் பிடித்து அணி விரல்களை இணைத்து நடுவில் நிமிர்ப்பது.

54. திரிசூல முத்திரை:—இரண்டு கைவிரல்களையும் எதிர் முகமாகச் செருகி, கைகளை இணைத்து பெருவிரல்களையும் நடு விரல்களையும் சிறு விரல்களையும் நீட்டி யிணைப்பது.

55. மகர முத்திரை:—திரிசூல முத்திரையில் சுட்டு விரல்களை நீட்டி, வலது சுட்டு விரலால் இடது அணிவிரலையும் இடது சுட்டு விரலால் வலது அணிவிரலையும் வளைத்துப் பிடிப்பது.

56. சிருக்கு முத்திரை:—மகர முத்திரையில் சிறு விரல்களிரண்டையும் உள்ளே வளைத்து நடுவிரல்களிற் படிய நீட்டி அவற்றைப் பெருவிரல்களாற் றொடுவது.

57. மற்றொருவகை நாராச முத்திரை:—இருகைகளையும் முட்டியாகப் பிடித்து, சுட்டு விரல்களை நீட்டி வளைத்து அவற்றில் பெருவிரல்களைச் செருகித் தெறிப்பது. இது சிவ பூசையில் வருவது.

58. தியாக முத்திரை:—விரல்களை நுனிகள் பொருந்தச் சேர்த்துக் குவிப்பது.

59. பரிகை முத்திரை:—இடது சிறுவிரல் நாபியைத் தொட, வலது பெருவிரல் மூக்கினைத் தொட, இடது பெருவிரலை வலது சிறுவிரல் பொருந்தியிருப்பது.

60. சண்முகி முத்திரை:—பெருவிரல்களாற் காதுகளையும், நடு விரல்களாற் கண்களையும், அணி விரல்களால் மூக்குத் துவாரங்களையும் மறைப்பது.

61. பரிக முத்திரை:—வலது கையை முட்டியாகப் பிடித்து, சுட்டு விரலை நீட்டி, இதனால் வலமாகச் சுற்றுவது.

62. முற்கார முத்திரை:—முட்டியாகப் பிடித்த இருகைகளையும் இணைத்துச் சுட்டு விரல்களை நீட்டுவது.

முத்திரை விதி

முற்றிற்று.

# அநுட்டான முத்திரைகளின் படங்கள்.



1. சிகா முத்திரை.



2. நமஸ்கார முத்திரை.



3. சம்மார முத்திரை.



4. நிரீட்சண முத்திரை.



4-(அ.) கோகோட்ட முத்திரை.



5. தீட்சண முத்திரை, அல்லது திராசனி முத்திரை.



6. அதோமுகி முத்திரை.



7. சோத்திக முத்திரை, அல்லது அப்புட்சண முத்திரை, கவிழ்ந்தபதாகை முத்திரையும் இதுவே.



8. கோவிடாண முத்திரை.



9. சோடிகா முத்திரை.



10. அதிதீக்கண முத்திரை.



11. தேனு முத்திரை.



12. கோமுக முத்திரை.



13. சங்க முத்திரை.



14. கோகர்ண முத்திரை.



15. பதாகை முத்திரை.
இதைக் கவிழ்த்தால் கவிழ்ந்த பதாகை; நிமிர்த்தால் நிமிர்ந்த பதாகை.



16. திவ்விய முத்திரை.



17. சாண முத்திரை.



18. மிருக முத்திரை.



19. நிரோதன முத்திரை.



20. குப்ப முத்திரை.



21. மகாமுத்திரை,



21.(அ.) மகா முத்திரை.
அங்கநியாசத்தில் வருவது.



22. சங்கார முத்திரை



23. பிரசன்ன
முத்திரை.
ஆவாகன
முத்திரையும்
இதுவே.



24. அதிஷ்டான முத்திரை.



25. உஷ்ணீக முத்திரை. பிரமநியாசத்தில் வருவது.



25-(அ.) உஷ்ணீக முத்திரை. ஷடங்கநியாசத்தில் வருவது.



26. சின்மய முத்திரை.



27. மோக முத்திரை, அல்லது யோக முத்திரை.



28. ஆக்கிர முத்திரை.



29. கடா முத்திரை.



30. ஆன்மலீக முத்திரை.



31. ஆக்ரகண்ட முத்திரை, அல்லது நேத்திர முத்திரை. இது திரிசூல முத்திரை எனவும் பெயர் பெறும்.



32. நாராச முத்திரை.



33. உஷ முத்திரை.



34. வராக முத்திரை.



35. அங்குச முத்திரை.



36. திரு முத்திரை.



37. ஊர்த்துவ முகி முத்திரை.



38. சபா முத்திரை, அல்லது சடா முத்திரை.



39. பஞ முத்திரை.



41. துருவ முத்திரை.



40. கண்டி முத்திரை.



42. செகண்டி முத்திரை.



43. ஆவாகன முத்திரை.



43-(அ.) இதுவும் ஆவாகன முத்திரையாகும்.



44. ஸ்தாபன முத்திரை.



45. சன்னிதான முத்திரை.



46. சன்னிரோதன முத்திரை.



47. பத்ம முத்திரை.



50. காளகர்ணி முத்திரை.



48. பிம்ப முத்திரை.



49. விஸ்புர முத்திரை.



51. இலிங்க முத்திரை.



52. மனோரத முத்திரை.



54. திரிசூல முத்திரை.



53. பஞ்சமுக முத்திரை.



50-(அ.) இதுவும் ஒருவகைக் காளகர்ணி முத்திரை.



55. மகர முத்திரை.
(முன்புறம்)



55-(அ.) மகர முத்திரை.
(பின்புறம்)



56. சிருக்கு முத்திரை,
(முன்புறம்.)



56-(அ.) சிருக்கு முத்திரை.
(பின்புறம்.)



57. மற்றொருவகை நாராச முத்திரை.



58. தியாக முத்திரை.



59. பரிகை முத்திரை.



60. சண்முகி முத்திரை.



61. பரிக முத்திரை.



62. முற்கார முத்திரை.



63. இது ஒருவகை சங்கார முத்திரை.



64. தர்ப்பண முத்திரை.




65. அதாரசுத்தி தொடுமிடம் முதலியவைகளின் அதிதெய்வங்களைக் காட்டும் படம்




66. விபூதிதரிக்கும் இடங்கள் அளவுகளைக் காட்டும் படம் (முன்புறம்)




66·(அ.) விபூதி தரிக்கும் இடங்கள் அளவுகளைக் காட்டும் படம் (பின்புறம்)




67. விபூதிதரிக்கும் இடங்களையும் தொடும் இடங்களையும் காட்டும் படம்.

உ

66, 66-(அ.) படங்கள்.

# விபூதி தரிக்கும் இடம் அளவு மந்திரம் அதிதெய்வங்கள்.

| எண். | இடம். | அளவு. | மந்திரம். | அதிதெய்வம். |
|---|---|---|---|---|
| 1. | உச்சி | 1 அங்குலம் | ஈசானம் | சதாசிவன். |
| 2. | நெற்றி | 6 ஷை | தத்புருஷம் | மகேசன். |
| 3. | மார்பு | 6 ஷை | அகோரம் | உருத்திரன். |
| 4. | நாபி | 1 ஷை | வாமதேவம் | விஷ்ணு. |
| 5. | வலதுமுழந்தாள் | 1 ஷை | சத்தியோசாதம் | பிரமன். |
| 6. | இடதுமுழந்தாள் | 1 ஷை | ஷை | வாமை. |
| 7. | வலதுதோள் | 6 ஷை | ஷை | சேட்டை. |
| 8. | இடதுதோள் | 6 ஷை | ஷை | இரௌத்திரி. |
| 9. | வலது முழங்கை | 1 ஷை | ஷை | காளி. |
| 10. | இடது முழங்கை | 1 ஷை | ஷை | கலவிகரணி. |
| 11. | வலது மணிக்கட்டு | 1 ஷை | ஷை | பலவிகரணி. |
| 12. | இடது மணிக்கட்டு | 1 ஷை | ஷை | பலப்ரதமனி. |
| 13. | வலது விலா | 1 ஷை | ஷை | சர்வபூததமனி. |
| 14. | இடது விலா | 1 ஷை | ஷை | ஷை |
| 15. | முதுகு | 1 ஷை | ஷை | ஷை |
| 16. | கழுத்து | 1 ஷை | ஷை | மனோன்மணி. |

குறிப்பு:—13-14-க்குப் பதிலாக 15-A, 15-B, என்ற வலக்காது இடக்காதுகளைக் கொள்வதுண்டு. அவைகளுக்கு அதிதெய்வங்கள் அசுவனிதேவர்கள். மற்றவை முன் போலவே இந்தப் படத்திற் காணும் தமிழ் இலக்கங்கள் தொடுமிடங்களைக் குறிப்பன.

# தொடுமிடங்களும் அவற்றின் அதிதெய்வங்களும்.

| எண். | | இடம் | அதிதெய்வம். |
|---|---|---|---|
| *1. | † க. | முகம் | கங்கை |
| 2. | உ. | வலமூக்கு | பிராணன் |
| 3. | ௩. | இடமூக்கு | |
| 4. | ச. | வலக்கண் | சூரியன் |
| 5. | ரு. | இடக்கண் | சந்திரன் |
| 6. | சா. | வலக்காது | அஷ்டதிக்கு பாலகர் |
| 7. | எ. | இடக்காது | |
| 8. | அ. | நாபி | பிரமன் |
| 9. | கூ. | மார்பு | உருத்திரன் |
| 10. | க0. | வலத்தோள் | அசுவனிதேவர்கள் |
| 11. | கக. | இடத்தோள் | |
| 12. | கஉ. | சிரசு | விஷ்ணு |

அதரசுத்தி.

| | | |
|---|---|---|
| A. | மேலுதடு | அஷ்டநாகம். |
| B. | கீழுதடு | இதிகாசம். |
| C. | வாய் | வேதம். |

| | | |
|---|---|---|
| க. | புருவமத்தி | அக்கினி. |
| உ. | வலக்காது | அக்கினி. |
| ௩. | வலக்காற் பெருவிரல் | அக்கினி. |
| ச. | மூக்கு | பிராணன். |
| ரு. | நாக்கு | பிரணவம். |

* 65-ம் படத்து எண்கள். † 67-ம் படத்து எண்கள்.

உ

சிவமயம்.

ஆசமன மந்திரம்— 1. ஓம் ஹாம் ஆத்மதத்த்வாய ஸ்வதா
2. ஓம் ஹீம் வித்யாதத்த்வாய ஸ்வதா
3. ஓம் ஹூம் சிவதத்த்வாய ஸ்வதா

பஞ்சகலா மந்திரம்—1. ஓம் ஹ்ராம் நிவ்ருத்தி கலாயை நம: ।
2. ஓம் ஹ்ரீம் ப்ரதிஷ்டா கலாயை நம: ।
3. ஓம் ஹ்ரூம் வித்யா கலாயை நம: ।
4. ஓம் ஹ்ரைம் சாந்திகலாயை நம: ।
5. ஓம் ஹ்ர: சாந்த்யதீத கலாயை நம: ।

**சங்கிதா மந்திரம்.—**

1-பஞ்சப் பிரமமந்திரம்-1. ஓம் ஹோம் ஈசாந மூர்த்தாய நம: ।
2. ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம: ।
3. ஓம் ஹூம் அகோரஹ்ருதயாய நம: ।
4. ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம: ।
5. ஓம் ஹம் ஸத்யோஜாத மூர்த்தயே நம: ।

2-ஷடங்க மந்திரம்—1. ஓம் ஹாம் ஹ்ருதயாய நம: ।
2. ஓம் ஹீம் சிரஸே நம: ।
3. ஓம் ஹூம் சிகாயை நம: ।
4. ஓம் ஹைம் கவசாய நம: ।
5. ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம: ।
6 ஓம் ஹ: அஸ்த்ராய நம: ।

கணபதி மூலம்— ஓம் கம் கணேசாய நம: ।

குரு மூலம்— ஓம் கும் குருப்யோ நம: ।

அஸ்திர காயத்திரி— ஓம் சிவாஸ்த்ராய வித்மஹே காலாநலாய தீமஹி தந்நோ அஸ்த்ர ப்ரசோதயாத்

சிவகாயத்திரி— ஓம் ஹாம் தத்புருஷாய வித்மஹே வாக்விசுத்தாய தீமஹி தந்நோசிவ: ப்ரசோதயாத்.

தேவி மூலம்— ஓம் ஹ்ரீம் தேவ்யை நம:

கந்தன் மூலம்— ஓம் ஹாம் ஸ்கந்தாய நம:

மகாமனு— சிவசிவ

சூரியமூலம்— ஓம்-ஹ்ராம்-ஹ்ரீம்-ஸ: சிவஸூர்யாய நம:

சப்தகோடி மகா மந்திரம்—1. நம:, 2. ஸ்வாஹா, 3. ஸ்வதா, 4. வஷட், 5. வௌஷட், 6. ஹூம், 7. பட்.

சிவமயம்.

# சைவாநுட்டான விதி.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

## 1. பாத்திர சுத்தி.

அநுட்டான பாத்திரத்தை வெள்ளையிட்டு இரண்டு தரம் ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று அஸ்திர மந்திரத்தாற் கழுவிச் சுத்தி செய்யவேண்டும்.

## 2. பூமி சுத்தி.

சுத்தியான பாத்திரத்தில் இருதய மந்திரத்தால் ஓம்ஹாம் இருதயாய வௌஷட் என்று சுத்தசலத்தைப் பூரித்து, சுத்தமான பூமியில் அநுட்டானம் செய்வதற்குரிய இடத்தை ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று சலத்தினாலே புரோட்சித்துச் சுத்திசெய்து, அவ்விடத்தில் அத்திரத்தால் ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று சிறிது சலம் விட்டு, அநுட்டான பாத்திரத்தை வைக்கவேண்டும்.

சலத்தில் நின்று அநுட்டானம் செய்யவேண்டில், சுத்தமுள்ள நீரிலே குமிழி நுரையில்லாத புனிதசலமாயிருக்கின்றவிடத்திலே முழந்தாளளவில், புத்திகாமன் கிழக்கு முகமாகவும், முத்திகாமன் வடக்குமுகமாகவும் நின்று, அல்லது கரையிற் குக்குடாசனமாக விருந்து சலத்தை அஸ்திர மந்திரத்தால் ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று புரோட்சிக்கவேண்டும்.

கலங்கனீர், உவர்நீர், பாசிநீர், வெந்நீர், பழையநீர், சொறிநீர் முதலான நீரை விலக்கவேண்டும்.

## 3. சங்கற்பம்.

பரமேசுவரர் மகிழ்ச்சியின்பொருட்டு காலை (உச்சிகால, மாலை, இராத்திரி) சந்தியைச் செய்கின்றேன் என்று எண்ணவும்.

## 4. கணபதி வந்தனம்.

விபூதியை நெற்றி மார்பு, கைகளில் உத்தூளனமாக சிவ சிவ என்று பூசிச் சுத்தி செய்துகொண்டு, சிகாமுத்திரையால் ஓம்கம் கணேசாயநம: என்று தலை உச்சியின் இரண்டு பாரிசத்திலும் மூன்று முறை குட்டிக்கொண்டு கணபதியைத் தியானிக்கவேண்டும்.

## கணபதி சொரூபத்தியானம்.

சுந்தரஞ்சேர் சுமுகனை தாரசத்தி மடிமேற்
றேன்றுவன்பஞ் சானனமீ ரைந்துகையுந் துலங்கும்
நந்தலிலா மணிமகுடஞ் சூர்ப்பமுறுங் கன்ன
நண்ணுமுகந் தொறுமுக்க ணற்கரங்க டோறுங்
கந்தமுறுங் கமுகினுறும் பாளையுநெற் கதிருங்
கழைவில்பஞ்ச மலர்ப்பாணங் கதிர்வாள்வேல் கண்டை
இந்திரனை யுதந்துதிக்கை தொறுமி ரத்தின கலச
மெழில்செறிமோ தகங்கோடு மேந்தியிடர் கெடுப்பான்.

## 5. குரு வணக்கம்.

நமஸ்கார முத்திரையால் சிரசின்மீது ஓம் கும் குருப்யோ நம: என்று குருவைத் தியானித்துக் கும்பிடவேண்டும்.

## குரு சொரூபத்தியானம்.

" வடவாலி னிழலமர்ந்தங் கறமுரைத்துக் குருந்தடியின் மணிப்பாப் பெற்றும், படநாகம் பிறைநதிச்செஞ் சடையுமா னிட நீத்த பரமேபூமா, னிடனுகி வெண்ணீறுஞ் சுந்தரவே டமுமணிந்து நிறைந்த தேசி, னுடனுளும் படிகொளும்பொற் றிருவடிவ மெந் நாளு முளத்தில் வைப்பாம்."

## 6. சலசுத்தி.

சலசுத்தியாவது:—அநுட்டான சலத்தை வலது பெருவிரல் களைச் சேர்த்து நீட்டி, கனிட்டை விரல் கீழாகக்கொண்ட சம்மார முத்திரையாற் சலத்தை ஓம்ஹ: அஸ்திராயபட் என்று வலமிட மாக நீக்கி, சலத்திலுள்ள * அஞ்ஞானம் நீங்கி அமிர்தத்துவம் உண்

---

* அஞ்ஞானம் = அசுத்தம்.

டாதற்பொருட்டு நிரீக்கணம், புரோக்கணம், தாடனம். அப்பியுக் கணம், தாளத்திரயம், திக்குபந்தனம், அவகுண்டனம், அமிர்தீ கரணம் செய்து கங்கையைத் தியானித்தல்.

## சலத்திலுள்ள அஞ்ஞானம்.

அஞ்ஞான மாவதுகேண் மலசமைண் டேக
மரவமயிர் மயிலைநுரை யடர்புழுக்கற் கடகம்
பைஞ்ஞா லு மல்குன்மின்னூர் பூப்பொடுகூ தகங்கள்
பரவுசவ மசநீச ரத்தி பதிதர் மருவியநீர்
மைஞ்ஞாலுங் கந்தரத்தோ னுகமநிந் திதர்கள்
மருவியநீ ரெச்சில்குரு நிந்திதர்வந் துறுநீர்
எஞ்ஞான்று மனுவுரைத்தே நிரீட்சணமுத் திரைகொண்
டிவையகற்றி நியதிநிய மங்களைநீ யியற்றே.

## நிரீட்சணம் (பார்த்தல்).

நிரீட்சணமாவது :— சலத்திலுள்ள அஞ்ஞானத்தை (குற்றத்தைச்) சூரியனுகிப வலக்கண்ணு லுலர்த்தினதாகவும், அக்கினியாகிய நெற்றிக்கண்ணுல் தகித்ததாகவும், சந்திரனுகிய இடக்கண்ணுல் அமுதங்கொண்டு நனைத்ததாகவும் எண்ணி திவ்விய முத்திரையால் வலக்கண், நெற்றிக்கண், இடக்கண்களை முறையே நியசித்து நிரீட்சண முத்திரையால் ஓம்ஹாம்சிவாயநம : என்று பார்த்தல்.

## கங்கை தியானம்.

மாற்றவ ளிடப்பான் மேவி வாழ்வதை யுணர்ந்து வள்ளல்
போற்றுறும் வலப்பான் மேவிப் புரிந்துவந் தாடா நின்றோர்
சாற்றருங் கொடிய பாவத் தளையழித் தறங்க ளெல்லா
மேற்றிநன் கருளுந் தெய்வக் கங்கையை யிறைஞ்சல் செய்வாம்
(காசி ரகசியம்)

## புரோட்சணம்.

புரோட்சணமாவது :— சுத்தியான நீர் தூயதாதற்பொருட்டு விந்துத்தானமாகிய புருவநடுவிலுள்ள அமுதத்தை அங்குச முத்திரையால் வாங்கி, பதாகை முத்திரையுடைய கையாலே ஓம்ஹ : அஸ்த்ராயபட் என்று அந்தநீரிற் றெளிப்பதாகப் பாவித்துத் தெளித்தல்.

## தாடனம்.

தாடனமாவது :— தூயதான நீரில் வியாபித்திருக்கின்ற சிவ சத்தியைப் பிரகாசிப்பிக்கும் பொருட்டு, தீட்சண முத்திரையால் ஓம்ஹ : அஸ்த்ராயபட் என்று ஒருமுறை தட்டுதல். தாடனம்— தட்டுதல்.

## அப்பியுட்சணம்.

அப்பியுட்சணமாவது :— நீரிற்றோன்றிய சிவசத்திப் பிரகாசம் ஆண்டுவிட்டு நீங்காது வைகுதற் பொருட்டு கவிழ்ந்த பதாகையாகிய சோத்திக முத்திரையால் ஓம் ஹைம் கவசாய வௌஷட் என்று நீரை மூடுதல். அப்பியுட்சணம் — மூடுதல்.

## தாளத்திரயம்.

தாளத்திரயமாவது :—இவ்வாறு விளங்கிய சிவசத்திப் பிரகாசங்கட்குக் கேடு செய்யவரும் அசுரர் முதலியோரை ஓட்டுதற் பொருட்டு, கோவிடாண முத்திரையால் இடவுள்ளங்கையில் ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று மும்முறை தட்டுதல்.

## திக்கு பெந்தனம்.

திக்குபெந்தனமாவது :— சிவசத்திப் பிரகாசங்கட்கு எண் மருங்கினும் அசுரர் முதலியோர் வாராதொழியுமாறு, கிழக்குமுதல் எட்டுத்திக்கினும் சோடிகா முத்திரையால் ஓம்ஹ :அஸ்த்ராயபட் என்று சொடித்து அவ்வவ் விடங்களில் அக்கினிப் பிரகாச முண்டாக்கிக் காவல் அமைத்தல்.

## அவகுண்டனம்.

அவகுண்டனமாவது :—அந்தச் சிவசத்தி பிரகாசித்தத் தானத்தைச் சூழ மூன்று மதில்களும், மூன்று அகழிகளு முண்டாகுவதாக எண்ணி அதிதீட்சண முத்திரையால் ஓம் ஹைம் கவசாயவௌஷட் என்று அந்தத்தானத்தைச் சூழவளைத்து மூன்று முறைச்சுற்றுதல்.

## தேனுமுத்திரை.

தேனுமுத்திரையாவது:—இனிஅந்தநீரில் அமுதம் பொழிந்த தாகப் பாவித்து, ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் என்று

தேனு முத்திரை காட்டுதல். இந்த அமுதம் பூதாமுத மெனப் பெறும்.*

* இதன் பின்னர் ஓம்ஹாம் சிவாயவௌஷட் என்று இருகைப் பெரு விரல்களையும் உள்ளடங்கப் பின்னி மற்ற விரல்களை நீட்டி சலத்தை மூடு வதாகிய மஹா முத்திரை கொடுப்பதும் உண்டு.

## 7. சலப்புரோட்சணம் (சரீரசுத்தி).

சலப்புரோட்சணமாவது :— கன்மசரீரம் சுத்தியாதற் பொருட்டு அனைத்தையுஞ் சுட்டெரிக்கும் வல்லமையையுடைய அஸ்திரமந்திரத்தால் கோமுக முத்திரைகொண்டு ஓம்ஹ : அஸ்த்ராய வௌஷட் என்று மும்முறை சிரசில் புரோட்சித்தல்.

## 8. அஸ்திர சந்தி.

அஸ்திர சந்தியாவது :—சருவ வியாபியாய் நிஷ்களராயுள்ள சிவபெருமான் உயிர்கள் வழிபட்டு உய்தற்பொருட்டுத் தமது பெருங் கருணையால் ஞாயிறு முதலிய அட்டமூர்த்தமாக விளங்குகின்றாராகலின், அவற்று ளொன்றான ஞாயிறு மண்டலத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானைத் தியானித்து, பாவத்தை யழிக்கு மாற்ற லுடைய அஸ்திர மந்திரங்கொண்டு அவருக்கு நீராற் றருப்பித்து மகிழ்வித்தல்.

தருப்பணம்—மகிழ்வித்தல். அஸ்திர சந்தி = அஸ்திரத்தைச் செவ்வையாகத் தியானித்தல். இது கரும மல நீக்கத்தின் பொருட்டுச் செய்யுங் கிரியை.

## அஸ்திர மூர்த்தி தியானம்.

"பவளநிறம் பஞ்சா னனம் பாணிபத்தும் பகர்வதனந் தொறு முக்கண் பணிமணிசேர் முடியும்—இவளவென வொளிமதியா வெழின்மணிகுண் டலக்கா திருட்களம்பா சாங்குசம்வா ளிலங் குதிரிசூலம்—உவளகஞ்சேர் கஞ்சமல ருயர்கண்டை யாகமூணுறுசக் கரம்வரத முள்ளொளிசே ரபயந்—துவளுமிமில் சேர்விடைமேற் றுலங்கியபூண் செறியத் தோன்றுவனஸ் திரமூர்த்தி யஞ்ஞானந் துரந்தே."

அஸ்திரசந்தி செய்யுமாறு :—இரு கைகளையுங் கூட்டிச் சங்க முத்திரையால் ஓம்ஹ : அஸ்த்ராய சுவாஹா என்று மேற்படி சூரிய மண்டலத்திலிருக்கும் சிவபெருமானுக்கு மூன்றுமுறை தருப் பணஞ்செய்து, ஓம் சிவாஸ்த்ராய வித்மஹே காலாநலாய தீமஹி தந்நோ அஸ்த்ரப்ரசோதயாத் என்று அஸ்திர காயத்திரியைப் பத் துருச் செபித்து மீட்டும் ஒருமுறை ஓம்ஹ : அஸ்த்ராய சுவாஹா என்று தருப்பணஞ் செய்யவேண்டும்.

## 9. ஆசமனம்.

ஆசமனமாவது:—தருப்பையினாலேனும், பொன்னினாலேனும், வெள்ளியினாலேனும் செய்யப்பட்ட பவித்திரத்தை வலது அநா மிகை விரலிற்றரித்து, கோகர்ண முத்திரைகொண்டு பெருவிரலடி யிற் சார்ந்த உழுந்தமிழ்ந்து நீரை, ஓம் ஹாம் ஆத்மதத்வாய சுவதா, ஓம் ஹீம் வித்யாதத்வாய சுவதா, ஓம் ஹூம் சிவதத்வாய சுவதா என்று அங்குட்டத்தின் அடி அதாத்திலே படும்படியான பிரம தீர்த்தமாக இடையிடையே அத்திரத்தால் கைகழுவி மும்முறை ஆசமித்தல். ஆசமனம்—நீரைப்பருகுதல். அதாவது, அடிநாக்கு முதல் உந்திவரை ஓர் மயிரிழைப் பிரமாணம் செல்லும்படி நீரைக் கொள்ளுதல். ஏறக்கொள்ளுதல் சுராபானத்தை யொக்கும். குறை யக்கொள்ளில் தேவதைகள் பிரீதி யடையார்கள்.

இது தத்துவத்திரயங்களின் உபாதான காரணமாகிய மாயா மல சுத்தியின் பொருட்டுச் செய்யப்படுவது. ஸ்வதா என்னும் மந் திரோச் சாரணத்தால், தத்துவத்திரயங்களின் அதி தேவதை களாகிய பிரம விஷ்ணு உருத்திரர்கள் பிரசன்னமாகித் தத்துவங் களைச் சுத்திசெய்தருளுவர். மேலும் இருக்கு, யசுர், சாமம் என்னும் மூன்று வேதங்களும் பிரீதி யெய்தும்.

## 10. அதரசுத்தி.

அதரசுத்தியாவது :—பதாகை முத்திரைகொண்டு அங்குட் டத்தடியால் வலமிருந்து இடமாக உதடுகளை ஓம் ஹ: அஸ்த்ராயபட் என்று இருமுறை துடைத்து உள்ளங்கையினாலே* மேலிருந்து கீழாக ஒருமுறை துடைப்பது. உதடுகளிரண்டையுந் துடைத்த

வினல் அதர்வண வேதமும், இதிகாசமும் பிரீதியெய்தும். அவற்றை அதோமுகமாகத் துடைத்தலினல் விநாயகர் மகிழ்வர்.

* உள்ளங்கையினல் மேலிருந்து கீழாகத் துடைக்கும்போது ஓம்கம் கணேசாய வெளஷட் என்று துடைப்பதும் உண்டு.

## 11 தொடுமிடம் (அங்கஸ்பரிசம்.)

தொடுமிடமாவது:—நாடி (முகம்) வலமூக்கு, இடமூக்கு, வலக்கண், இடக்கண், வலக்காது, இடக்காது, உந்தி, மார்பு (இதயம்), வலதுதோள், இடதுதோள், சிரம் எனும் பன்னிரண்டிடங்களைச் சுத்திசெய்தற்பொருட்டும், அவைகளின் அதிதெய்வங்களை மகிழ்வித்தற் பொருட்டும் திவ்விய முத்திரையால் ஓம் ஹாம் இருதயாய வெளஷட் என்று முற்கூறிய முறையே பன்னிரண்டு தானங்களையும் தொடுதல். முகத்தைத் தொடுவதற்கு கீழுதட்டின்கீழே மோவாய்மேல் தொடல்வேண்டும்.

பன்னிரண்டிடங்களின் அதிதெய்வங்களாவன:—நாடிக்கு (முகத்துக்கு) கங்கை, வலது மூக்குக்குப் பிரணவம், இடது மூக்குக்குப் பிராணவாயு, வலக்கண்ணுக்குச் சூரியன், இடக்கண்ணுக்குச் சந்திரன், வலது காதுக்கு இந்திரன் முதல் நிருதிவரை நால்வர், இடதுகாதுக்கு வருணன்முதல் ஈசானன்வரை நால்வர், உந்திக்குப் பிரமா, மார்புக்கு உருத்திரன், வலது தோளுக்கு இலக்குமி, இடது தோளுக்குச் சரசுவதி, சிரசுக்குச் சிவம்.

வலக்கைப் பெருவிரலுக்கு சுத்தசிவமும், அணிவிரலுக்கு அமிர்தகலையும் அதிதெய்வமாதலால், அமிர்தமாகிய அருளோடு கூடிய சிவத்தைக் குறிக்கும் திவ்விய முத்திரையாற் றொடுதலால் தானதெய்வங்கள் மகிழ்வுறும்.

## 12. கரசோதனை.

பசுகரணங்களாகிய கைகள் சுத்தியுறுதற்பொருட்டு சாணமுத்திரைகொண்டு ஓம் ஹ: அஸ்த்ராயபட் என்று இயல்பாகவே சுசியாகவிருக்கின்ற வலது கரத்தால் இடதுகரத்தின் அகங்கையை இருமுறையும் புறங்கையை ஒருமுறையும், வலக்கைச் சுசிமிகுதற் பொருட்டுச் சுசியான இடக்கையால் வலக்கையின் அகங்கையை ஒரு

முறையும் புறங்கையை யொருமுறையும், பின் இடக்கைச் சுசிமிகு தற்பொருட்டு வலக்கையால் இடது அகங்கையை இருமுறையும் புறங்கையை ஒருமுறையும் துடைத்தல்.

## 13. விபூதி சுத்தி.

விபூதியை, பஸ்மாலயத்திலிருந்து வலக்கரத்தால் மிருகமுத்திரைகொண்டு அந்த முத்திரைகொண்ட அளவு மூலமந்திரம் உச்சரித்து எடுத்து, இடது அகங்கையில் வைத்து, தீட்சண முத்திரையால் ஓம் ஹ: அஸ்த்ராயபட் என்று சலம்புரோட்சித்து, அந்த விபூதியில், திவ்விய முத்திரையால் அணுவள வெடுத்து, இராட்சதர்களால் உண்டாகத்தக்க இடையூறுகள் நீங்கும் பொருட்டு நிருதி மூலையில் ஓம் ஹ: அஸ்த்ராய ஹூம் பட் என்று தெறித்து, பின்னர் கரத்திலிருக்கும் விபூதியில் நிரீட்சணம், புரோட்சணம், தாடனம், அப்பியுட்சணமாகிய நான்கையுஞ் செய்து, அகற்ப விபூதியாகில் மாயா சன்னிபமாகிய அதிலுள்ள மலத்துவம் நீங்கும் பொருட்டு, நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளைத் தியானித்து வலக்கரத்தால் அப்புட்க்ஷண முத்திரைகொண்டு விபூதியை மூடி "ஓம்ஹ்லாம் நிவர்த்தி கலாயை நம:, ஓம்ஹ்வீம் பிரதிஷ்டா கலாயை நம:, ஓம் ஹ்ரூம் வித்யா கலாயை நம:, ஓம்ஹைம் சாந்தி கலாயை நம:, ஓம்ஹ: சாந்தியாதீத கலாயை நம: எனும் பஞ்சகலா மந்திரங்களை முறையே ஒரு முறைச் செபித்து, திக்குப்பந்தனமும் அவகுண்டனமுஞ் செய்து, "ஓம்ஹோம் ஈசான மூர்த்தாய நம:, ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராயநம:, ஓம்ஹூம் அகோர இருதயாயநம, ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாயநம: ஓம்ஹம் சத்யோசாத மூர்த்தயேநம:, எனும் பஞ்சப்பிரம மந்திரங்களும், ஓம்ஹாம் இருதயாயநம:, ஓம்ஹீம் சிரசேநம: ஓம்ஹூம் சிகாயைநம:, ஓம் ஹைம் கவசாயநம:, ஓம்ஹௌம் நேத்ரேப்யோநம:, ஓம்ஹ: அஸ்த்ராயநம: எனும் ஷடங்க மந்திரங்களும் சேர்ந்த சங்கிதா மந்திரத்தை ஒருமுறை அபிமந்திரித்து, விபூதியிலுள்ள சிவன தைசுவரிய சத்திகளைப் பிரகாசிக்கச் செய்து, விபூதி ருத்திரரைத் தியானிக்கவும்.

### நிவிர்த்திகலை சொரூபத்தியானம்.

"உருக்கியபொன்னெனவொளிருந் திருவுருவா னனங்களொரு நான்கும் பிறைமருவு முயர்சடில முடியுந்—திருவுருவங் கரதலங்க

ளொருநான்குந் திகழுஞ் சினக்குலிச மபயமிடஞ் சேர்ந்தவலக் கரத்திற்—பெருகொளிசேர் செபவடமும் பெருத்தெழு முண்டகமும் பேசரிய மணிப்பூணும் பிறங்கியநூன் மார்பு—நிருமலமாகிய நிவிர்த்தி கலைமருவி யிருந்த நின்மலனை நினைக்கவினை நீறுநீ றுறுமே.

## பிரதிஷ்டாகலை சொரூபத் தியானம்.

"தெளிபடிகத் திருவுருவோ ரானனநாற் கரத்திற் சிறந்திடும்பா சம்வரதந் திகழுமிடக் கரத்தில்—ஒளிசெறியுஞ் செபவடமு முற்றெழுமுண் டகமு முயர்புரிநூன் மணியிழைத்த வும்பரெனும் பணியும்—பளிதமுறுஞ் சந்தனகத் தூரியுறும் புயமும் பவளநிறஞ் செறிந்திடும்பூம் பட்டுமுடை வாளும்—அளிசெறி கற்பகமாலை யணிந்து பிரதிட்டை யாயகலைப் பொருளையுன்ன வகன்றிடு மாணவமே."

## வித்தியாகலை சொரூபத் தியானம்.

"தீதிலிந் திரகோபத் திருவுருவந்திலகஞ் செறிந்தமுக மொருமூன்றுந் திண்புயங்க ணான்கும்—போதியனுங் கரதலத்தில் வேல்வரத மிடப்பாற் பொருவரிய செபவடமும் புண்டரிக மிலங்கப்—பாதிமதிச் சடைமுடியும் பண்பொழிசே ரதளப் பணிப்பூணங் கதமிலங்கப் பரந்து நறவொழுகுஞ்—சாதிமலர்த் தொடையணிந்து வித்தைதனி லமர்ந்த தாணுவையுன் னிடத் தயங்குந் தற்பரத்தைச் சார்வார்."

## சாந்திகலை சொரூபத் தியானம்.

"எள்ளலிலா முகநான்கு மஞ்சனநேர் வடிவு மிசைப்பரிய பெருவலியு மெழிற்கரங்க ணான்கிற்—றெள்ளியசீர் செபவடமும் வரதமிடப் பாலிற் சேர்ந்திலங்கும் பதாகை யெழிற் செங்கமல மலரும்—புள்ளுலவுங் கற்பகத்தின் மாலையுடன் பொன்னூர் புரிநூலும் பொலன்மணிசேர் பூடணமும் பொலிய—வெள்ளமுறு சடிலமுமாய்ச் சாந்தி கலைமருவும் வித்தகனை நினைக்கவருள் வீடுறுவர் விரைந்தே."

## சாந்தியாதீதகலை சொரூபத் தியானம்.

"தண்பளிங்கு நிறமெழில்கள் சார்ந்தமுக மைந்துந் தடவரைநேர் புயநான்கிற் றயங்குசெப மாலை—விண்களிப்போர்க் கருள்வரதம் வலப்பால்மற் றிடப்பால் விசயமுறும் பாசமும் வெண்டாமரை

யின் மலருங்—கண்களிகூர்ந் திடுதரள மாலையுப வீதங் கற்பகமா லைகளிலங்க காதணி குண்டலமு—மண்களிக்க வருஞ்சாந்த்யா தீத கலா மயமாய் வந்தவுருத் திரனையுன்ன வல்வினைமாய்ந் திடுமே.''.

## விபூதி ருத்திரர் தியானம்.

"மூரலுறு முகமூன்று முகந்தோறு முக்கண்ணு மூன்றுகர மூன்றுபத முகையவிழ் முண் டகம்போல்—வீரமலி திரிசூலந் துடிய பயங் காதில் வெண்கு ழைவெண் டலைமாலை விற்புலித்தோ லுடை யுங்—கோரமலி விழிசுழலக் கோடீரந் தயங்கக் கோடியிர வியினொளி யாய்க் குஞ்சிதபா தனுமாய்—வாரமுறும் வெண்ணீற்றி லமர்ந்தவ னைப் பணிந்தே மன்னுதிரு நீறிடவே யாணவமா சறுமே.''

## 14. அமலஸ்நானம்.

அமலஸ்நானமாவது :—உடம்பெங்குமுள்ள இடையூறு நீங்க முன் சுத்திசெய்த திருநீற்றில் திவ்விய முத்திரையாற் சிறிதெ டுத்து ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று சிரசுமுதல் பாதபரியந்தம் உத் தூளனமாக அபிஷேகித்துக்கொள்ளவும்.

## 15. பஸ்மஸ்நானம்.

பஸ்மஸ்நானமாவது :—எஞ்சிய விபூதியில் நிரோதான முத்தி ரையால் ஓம்ஹ:இருதயாயநம: என்று சலம்விட்டு ஓம்ஹைம் கவசாய வௌஷட் என்று குழைத்து, நடுவிரல் மூன்றுங்கொண்ட திரிசூல முத்திரையால் திரிபுண்டரமாகச் சிரசில் ஓம்ஹோம் ஈசானமூர்த் தாயநம: என்று ஓரங்குல அளவில் மூன்று முறையும், நெற்றியில் இடம்வலமாக ஓம்ஹேம் தத்புருஷ வக்த்ராயநம : என்று ஆறங்குல அளவில் மூன்று முறையும், நாபியில் ஓம்ஹீம் வாமதேவ குஹ்யாய நம: என்று ஓரங்குல அளவில் ஒரு முறையும், ஓம்ஹம் சத்யோசாத மூர்த்தயேநம : என்று வலமுழந்தாள் இடமுழந்தா ளிரண்டிலும் ஓரங்குல அளவில் ஓரோர் முறையும் திருநீறிட்டு, வலதுகரத்தால் நீரை அத்திர மந்திரத்தால் தொட்டுக்கொண்டு கவசத்தாற் குழைத்து ஓம்ஹம் சத்யோசாதமூர்த்தயேநம: என்று ஆறங்குல அள வில் வலப்புயம் இடப்புயங்களில் ஓரோர்முறையும், வலமுழங்கை, இடமுழங்கை, வலமணிக்கட்டு, இடமணிக்கட்டு, வலவிலா, இட விலா, முதுகு, கழுத்து எனும் இவ்விடங்களில் ஷை சத்தியோஜாத மந்திரத்தால் ஓரங்குல அளவில் ஓரோர் முறையும் தரிப்பது பஸ்ம

ஸ்நானமாகும். தரிக்கின்றபோது இடையிடையே சுத்தியின் பொருட்டு அத்திரமந்திரத்தை நினைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும்.

இங்ஙனந் திரிபுண்டரமாகத் தரிக்கின்றபோது இரேகைகள் இடையறுமலும் ஒரே அகலமாயும் ஒன்றோடொன்று நெருங்காமலு மிருத்தல்வேண்டும். முக்குறியாகத் தரிப்பதால் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் தகித்து நீறுக்கித் தரிப்பதாக எண்ணப்படும்.

இவ்வாறு தரித்தலால் அவ்வவ்விடங்களுக்குரிய அதிதெய்வங்கள் மகிழ்ந்து பிரசன்னமாகி மலபந்தத்தை நீக்குவார்கள்.

விபூதிதரிக்குந் தானங்களுக்கு அதிதெய்வங்களாவன:—சிரசுக்குச் சிவம், நெற்றிக்கு மகேசுவரன், மார்புக்கு உருத்திரன், நாபிக்கு விஷ்ணு, முழந்தாள்களுக்குப் பிரமா, புசங்களுக்கு விநாயகர் கந்தர், முழங்கைகளுக்குத் தேவேந்திரன் ஆதிசேடன், மணிக்கட்டுகளுக்குச் சரசுவதி மகாலெட்சுமி, விலாவிரண்டிற்கும் வாமாதி சத்திகள், முதுகுக்குப் பிரசாபதி, கண்டத்துக்கு ஏகாதச ருத்திரர்கள்.

## 16. மந்திரஸ்நானம்.

மந்திர ஸ்நானமாவது:—கையில் ஒட்டியிருந்த விபூதியை ஓம் ஹைம் கவசாய வௌஷட் என்று கழுவி அந்நீரைக் கும்பமுத்திரைகொண்டு பிடித்துப் பஞ்சப்பிரம மந்திரஞ் செபித்து ஓம்ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் என்று சிரசில் புரோட்சிப்பது. இது மல

† மார்பில் ஓம் ஹூம் அகோர ஹிருதயாய நம: என்று ஆறங்குல அளவில் மூன்று முறையும், (இதை 10-வது பக்கம் 24-ம் வரியின் மத்தியில் சேர்த்து வாசிக்கவும்.)

யத்தில் ஒடுக்கிக்கொள்வதாகப் பாவிக்க.

## 17. மானதஸ்நானம்.

மானதஸ்நானமாவது:—முன்செய்த தத்துவசுத்தி நிலைபெறுமாறு மறித்தும் அத்தத்துவங்களைச் சுத்திசெய்தற்பொருட்டு, முன்

போல ஆசமனம் பண்ணி அதாசுத்திசெய்து தொடுமிடந்தொட்டு, மும்மலங்களும் நீங்கி ஆன்மாவும் தேகமும் பரிசுத்தமெய்தும்படி பிராணுதி வாயுக்களை அடக்கியிருந்துகொண்டு, மூலாதாரமுதல் துவாதசாந்தபரியந்தம் நாதாந்தமாக ஓம்ஹாம் ஹௌம் சிவாயநம: என்று மூலமந்திரத்தை உச்சரித்து சிவத்தோடிரண்டற நிற்கும் படி பாவிக்குமிடத்து, விந்துவானது குழப்பப்பட்டு பரம வியோம ரூபிணி சத்தியின் வலக்கரத்தி னின்றெழுகும் அமிர்தப்பிரவாகத் தினல், அகமும் புறமும் தூயதாதற்பொருட்டு உடல் முழுமையும் நனைந்ததாகப் பாவித்தல் மானதஸ்நானமாகும்.

## 18. சகளீகரணம்.

சகளீகரணமாவது:—முன்செய்த கிரியைகளினல் பாச சம்பந்தம் நீங்கிய தேகத்தில் சிவத்துவம் உண்டாகும்பொருட்டுச் செய்யப்பெறும் கிரியை. சகளம்—உருவம். கரணம்—செய்தல்.

சிவனைக்குறித்துச் செய்யப்படுங் காரியங்களைச் சிவாகாரமான பொருள்களைக்கொண்டே செய்யவேண்டு மாதலின் சிவாகாரத்தை உண்டாக்கும் சகளீகரணமில்லாது எந்தக் கிரியைகளையும் சிவனைக் குறித்துச் செய்யலாகாது.

சகளீகரணமானது:—கரநியாசம், அங்கநியாசம் எனும் இரண்டு பகுதிகளையுடையது.

### 1. கரநியாசம்.

கரநியாசஞ் செய்யுமாறு:— பசுபாவத்தைப் போக்கிப் பதி ஞானத்தைத் தோற்றுவிக்கு மாற்றலுடைய சிவாஸ்திர மந்திரத்தை ஓம்ஹ: அஸத்ராயபட் என்று உச்சரித்து, சாணமுத்திரை கொண்டு வலக்கையால் இடக்கையின் உள்ளில் இரண்டு தரமும் புறத்தில் ஒரு தரமும், இடக்கையால் வலக்கையின் உள்ளும் புறமும் முறையே ஒரு தரமும், பின் வலக்கையால் இடக்கையின் உள்ளும்புறமும் முறையே இரண்டு தரமும் ஒரு தரமும் துடைத்துக், கரங்களிலுள்ள அசுத்தங்களையெல்லாம் சிவாஸ்திரத்தி லுண்டாகிய அங்கியாற் றகித்ததாகப் பாவித்துப் பின், ஓம் ஹௌம் சக்தயே வௌஷட்என்று இரண்டு கைகளையும் பிரசன்ன முத்திரையால் புருவமத்திவரை உயர்த்தி, அங்குள்ள அமிர்தத்தால் புனிதமானதாகப் பாவித்து, சத்தி சிவ வடிவினதாய் விளங்கும் இருகரங்களையும் குவித்த விடத்து,

அங்குட்டங்களொழிந்த மற்ற எட்டுவிரல்களும் எட்டிதழ்த் தாமரை வடிவினதாகவும், மத்தியில் உள்மடங்கியிருக்கின்ற அங்குட்ட விரல்கள் அக்கமலத்தின் பொகுட்டு வடிவமாகவும் பாவித்துப், பின் இரு கரங்களையும் சேர்த்து விரித்து அதிட்டான முத்திரையால் உள்ளங்கைகளில் ஓம்ஹாம் சிவாஸநாயநம: என்று நியசித்துச் சிவனுக்கு மந்திராசனம் அமைத்து, அம்முத்திரையாலேயே ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம: என்று நியசித்து, சிவாஸனத்தில் சிவமூர்த்தியை பெழுந்தருளச் செய்து, சிவமூர்த்தியை அறிவுருவாய், ஒளிவடிவாய், தெண்டாகிருதிபாய் வள்ளிதாகத் தியானித்து, உஷ்ணீக முத்திரையால் ஓம் ஹோம் ஈசாநமூர்த்தாய நம: என்று கட்டை விரல்களையும், சின்மப முத்திரையால் ஓம் ஹேம் தத்புருஷவக்த்ராய நம: என்று சுட்டு விரல்களையும், மோக முத்திரையால் ஓம் ஹும் அகோர இருதயாய நம: என்று நடு விரல்களையும், திவ்விய முத்திரையால் ஓம்ஹிம் வாமதேவகுஹ்யாய நம: என்று அணி விரல்களையும், ஆக்கிர முத்திரையால் ஓம் ஹம் சத்யோசாத மூர்த்தயே நம: என்று சிறு விரல்களையும் நுனிகளில் நியசித்து, சிவ பெருமானுக்குரிய ஐந்து திருமுகங்களையும் பாவித்து, அதிஷ்டான முத்திரைபால் ஓம் ஹாம் ஹௌம் வித்யாதேகாய நம: என்று உள்ளங்கைகளில் நியசித்து, சிவனுக்கு வித்யாதேகங் கற்பித்து, கடா முத்திரையால் ஓம் ஹௌம் நேத்ரேப்யோநம: என்று உள்ளங்கைகளில் நியசித்துத் திரி நேத்திரங்களைப் பாவித்து, ஆவாஹன முத்திரைபால் ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம: என்று உள்ளங்கைகளில் சிவமூலம் நியசித்துச் சிவனை ஆவாகித்து, சருவகருத்தரும் நிஷ்களரும் வியாபகரும் எண்வகைச் சிற்குணங்களையுடைய வரும் அறிவானந்த வடிவருமாக வுள்ளவரெனச் சிவத்தைத் தியானித்து, ஆக்கிர முத்திரையால் ஓம் ஹாம் இருதயாய நம: என்று சிறு விரல்களிலும், திவ்விய முத்திரையால் ஓம் ஹீம் சிரசே சுவாஹா என்று அணி விரல்களிலும், மோக முத்திரையால் ஓம் ஹூம் சிகாயைவஷட் என்று நடு விரல்களிலும், சின் முத்திரையால் ஓம்ஹைம் கவசாயவௌஷட் என்று சுட்டுவிரல்களிலும், உஷ்ணீகமுத்திரையால் ஓம்ஹ: அஸ்த்ராய ஹும்பட் என்று கட்டை விரல்களிலும் விரல்மத்திகளில் நீவி இருதயம் முதலிய அங்கங்களை நியசித்து, ஆன்மலீகமுத்திரையால் ஓம் ஹைம் கவசாய வௌஷட் என்று கை விரல்களைச் சுற்றி அவகுண்டனஞ் செய்து, நமஸ்கார முத்திரையால் ஓம்

ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் என்று அஞ்சலித்துப் பரமீகரணஞ் செய்க. பரமீகரணமாவது நமஸ்கார முத்திரையால் சிரசுக்கு மேல் அஞ்சலி செய்து இருதயம்வரை அஞ்சலியைக் கொண்டு வருதல். கைகளை அபயவரதமாய்க் காட்டுவதும் பரமீகரணமாமெனக் காமிகாகமங் கூறுகின்றது.

குறிப்பு :— இங்ஙனம் கரநியாசம் செய்யும்போது கிரகத்தன் சிருட்டிக் கிரமமாகவும், பிரமசாரி திதிக்கிரமமாகவும், வானப்பிரஸ்தனும் சந்நியாசியும் சங்காரக் கிரமமாகவும் செய்ய வேண்டும். சிருட்டிக்கிரமமாவது வலக்கைப் பெருவிரலாதியாகத் தொடங்கி இடக்கைப் பெருவிர லீறாக நியசிப்பது. திதிக்கிரமமாவது: பெருவிரல் முதல் சிறுவிரலீறாக நியசிப்பது. சங்காரக் கிரமமாவது, சிறுவிரல் முதல் பெருவிரலீறாக நியசிப்பது. (சுப்பிரபேதம்)

## 2. அங்க நியாசம்.

இனி அங்க நியாசம் செய்யுமாறு :—சாண முத்திரைகொண்ட இருகைகளாலும் ஓம் ஹ: சிவாஸ்த்ராய ஹூம்பட் என்று பாதமுதல் சிரசுபரியந்தம் துடைத்து சரீரத்திலுள்ள அசுத்தங்களெல்லாம் சிவாஸ்திரத்தி லுண்டாகிய அக்கினியால் தகிக்கப்பட்டதாகப் பாவித்து நமஸ்கார முத்திரையால் ஓம் ஹௌம் சக்தயே வௌஷட் என்று புருவநடுவுக்கு நேராக அஞ்சலி செய்து அங்குள்ள அமிர்தத்தால் சரீரம் சுத்தியானதாகப்பாவித்துச் சரீரசுத்திசெய்துகொண்டு.

திவ்விய முத்திரையால் இருதயத்தில் ஓம்ஹாம் சிவாஸநாயநம: என்று நியசித்துச் சிவாசனமாகிய மந்திராசனம் கற்பித்து, மீட்டும் அவ்விடத்தில் அம்முத்திரையாலேயே ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம: என்று நியசித்து சிவமூர்த்தி யெழுந்தருளியதாகப் பாவித்துத் தியானித்து உஷ்ணீக முத்திரையால் ஓம் ஹோம் ஈசாநமூர்த்தாயநம: என்று தலையுச்சியில் நியசித்து, சின்மய முத்திரையால் ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராயநம: என்று நெற்றியில் நியசித்து, மோகமுத்திரையால் ஓம்ஹூம் அகோர இருதயாயநம: என்று மார்பில் நியசித்து, திவ்விய முத்திரையால் ஓம்ஹிம் வாமதேவகுஹ்யாய நம: என்று நாபியில் நியசித்து, ஆக்கிரமுத்திரையால் ஓம்ஹாம் சத்யோசாத மூர்த்தயேநம: என்று தனித்தனி வலமுழந்தாள் இடமுழந்தாள்களில் நியசித்து, திவ்விய முத்திரையால் ஓம் ஹாம் ஹௌம் வித்யாதேஹாய நம: என்று மார்பில் வித்தியாதேகம்

நியசித்து, ஆக்கிரகண்ட முத்திரையால் (நேத்திர முத்திரையால்) ஓம்ஹௌம் நேத்ரேப்யோநம: என்று நேத்திரங்களை நியசித்து, திவ்விய முத்திரையால் ஓம்ஹாம் ஹௌம் சிவாயநம: என்று இதயத்தில் சிவமூல மந்திரம் நியசித்து, ஆக்ரமுத்திரையால் ஓம்ஹாம் இருதயாயநம: என்று இதயத்தை நியசித்து, திவ்விய முத்திரையால் ஓம்ஹீம் சிரஸே ஸ்வாஹா என்று உச்சியில் சிரசை நியசித்து, மோகமுத்திரையால் ஓம்ஹூம் சிகாயைவஷட் என்று சிகையை நியசித்து, நாராச முத்திரையால் ஓம்ஹைம் கவசாய வௌஷட் என்று கண்டத்திலிருந்து ஸ்தனமத்திவரை கவசம் நியசித்து, உஷமுத்திரையால் ஓம்ஹ: அஸ்த்ராய பட் என்று வலம் இடமாக அகங்கைகளில் நியசித்து * சிவாஸ்திரம் பாவித்து, கோவிடாண முத்திரையால் ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று தாளத்திரயஞ் செய்து, சோடிகா முத்திரையால் ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று சிரசைச் சூழ மேலே எண்மருங்கினும் திக்குபந்தனஞ் செய்து அக்கினியைக் காவல் வைத்து, அதிதீட்சண முத்திரையால் ஓம் ஹைம் கவசாயவௌஷட் என்று சிரசைச் சூழ கீழ்நோக்கி மேலே அவகுண்டனஞ்செய்து அகழமைத்து, மகா முத்திரையால் ஓம்ஹாம்ஹௌம் சிவாய வௌஷட் என்று பாதாதிகேசபரியந்தந் துடைத்தலாகிய பரமீகரணஞ் செய்தல்.

இவ்வாறு சிவபெருமானை மந்திராசனத்தில் எழுந்தருளச் செய்து அவயவங்களைப் பாவித்துப் பிரகாசமும் அக்கினிக்கோட்டையும் அகழும் உண்டானதாகப் பாவித்துப் பரமாமிர்தாபிஷேகம் பண்ணிப் பின் ஏகீபாவம் பாவித்தல் வேண்டும். ஏகீபாவம்—இரண்டறக்கலத்தல்.

## 19. பிராணுயாமம்.

பிராணுயாமமாவது:—பிராணவாயுவைத் தடுத்துப் போக்குவரவு செய்தல். பிராணன்—பிராணவாயு; ஆயாமம்—தடுத்தல்.

மனமாகிய மத்தயானை பிராணவாயுவெனும் சங்கிலித்தொடக்குண்டு திரிதலால் அம்மனதை அடக்க முயல்வோர்களெல்லாம் முன்னதாகப் பிராணுயாமஞ் செய்வர்.

பிராணுயாமமானது பூரகம் கும்பகம் இரேசகம் எனும் மூன்று கிரியைகளை யுடையது.

---

* சிவாஸ்திரதியானம். பக்கம் 5.

பூரகமாவது :—புறத்திலுள்ள சுத்தவாயுவை இடது நாசியிலுள்ள இடைகலை நாடியினால் வாங்கி உள்ளே நிரப்புதல்.

கும்பகமாவது :—அங்ஙனம் பூரித்தவாயுவை மத்தியிலுள்ள சுஷும்நா நாடியிற்சென்று வியாபிக்கும்படி உள்ளே நிறுத்துதல்.

இரேசகமாவது:—உள்ளே நிறுத்திய வாயுவை வலது நாசியிலுள்ள பிங்கலை நாடியால் வெளியில் விடுதல்.

இடைகலை பிங்கலை சுஷுமுனை நாடிகளின் ரேற்ற நிலைகளைச் சித்தாந்தப்பட விளக்கத்தில் விரிவாகக் காணலாம்.

இடைகலைக்குச் சந்திரகலையென்றும், பிங்கலைக்குச் சூரிய கலையென்றும் பெயருண்டு.

பிராணயாமம் சகற்பப் பிராணபாமம், அகற்பப் பிராணபாமம் என இருதிறப்படும்.

சகற்பப்பிராணபாமமாவது:—மந்திர தியானத்துடன் செய்யப்படுவது.

அகற்பப் பிராணயாமமாவது:—மந்திர தியானமில்லாது செய்யப்படுவது.

சகற்பப் பிராணபாமஞ் செய்யுமிடத்து சமயி புத்திரன் என்னுமிருவரும் சங்கிதாமந்திர தியானத்துடனும், சாதகன் ஆசாரியன் என்னுமிருவரும் பன்னிரண்டு முதலிய கலாப் பிராசாதத்தோடுகூடிய மூலமந்திர தியானத்துடனும் செய்யவேண்டும். சங்கிதாமந்திரமாவது ஈசானுதி பஞ்சப்பிரம ஷடங்கமந்திரம். பிராசாதமாவது சிவஞானகதியைக் கொடுப்பதோர் மந்திரம். இதைக் குருமுகமாக அறியவேண்டும்.

இனி பிராணபாமம் செய்யுமாறுவது :—வராக முத்திரையால் மூக்கைப் பிடித்துக்கொண்டு இடது நாசியைத் திறந்து அஸ்திர மந்திரம் செபித்து வாயுவை உள்ளே வாங்கி உடனே வலது நாசியைத்திறந்து அஸ்திரமந்திரஞ் செபித்து வாயுவை வெளியில் விட்டு நாடிசோதனை செய்து, பின்னர் நமோந்த சங்கிதாமந்திர செபத்துடன் இடது கலையால் வாயுவை 16-மாத்திரை கொண்டகாலம் பூரித்து, அம்மந்திர செபத்துடன் 64 மாத்திரை கொண்டகாலம் கும்பித்து,ஷை மந்திர செபத்துடன் 32 மாத்திரை கொண்டகாலம் இரேசித்து இவ்வாறு மும்முறை செய்து, அங்ஙனஞ் செய்வதனால்

வலது கரத்திலுண்டாகிய அசுத்தம் நீங்கும் பொருட்டு மூலமந்திர முச்சரித்துப் பதாகை முத்திரைகொண்ட வலது கரத்தால் வலது செவியைப் பொத்த வேண்டும். இதனால் வலது காதிலுள்ள அக்கினியின் வெப்பத்தால் கரஞ் சுத்தியுறும். மாத்திரையாவது கைநொடி முதலிய காலமாகும்.

இவ்வாறு பிராணாயாமஞ் செய்வதனால் புருவமத்தியிலுள்ள அமிர்தபிந்து ஜொலிப்பதுடன் இனி செய்யப்படுவதாகிய சந்தியா சத்தி தியானத்தில் மனம்விரிந்து புறம் போகாது ஒடுங்கியிருக்கும்.

## 20. சிவதீர்த்த கரணம்.

சிவதீர்த்த கரணம்=சிவ தீர்த்தஞ் செய்தல்.

சிவ தீர்த்த கரணமாவது:—இங்ஙனம் பிராணாயாமத்தினால் புருவநடுவாகிய விந்துத்தானத்தில் பிரகாசப்பட்ட ஞானமிர்தபிந்துவை அங்குச முத்திரைகொண்டு தொட்டு, ஓம்ஹாம் ஹௌம் இருதயாய வௌஷட் என்று உச்சரித்து அமிர்தத்தை யெடுத்ததாகப் பாவித்து,கும்ப முத்திரையாற் பிடித்து, அந்த முத்திரை கொண்டே முன் சுத்தியுற்ற நீரில் வைத்து, ஓம்ஹாம் ஹௌம் சிவாயநம: என்று அபிமந்திரித்து, அந்த நீரைச் சிவதீர்த்தமாகப் பாவித்து, அதற்கு ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று திக்குபந்தனமும் ஓம்ஹைம் கவசாய வௌஷட் என்று அவகுண்டனமுஞ் செய்து, ஓம்ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் என்று தேனு முத்திரை கொடுத்தல். இதன் பின்னர் சந்தியா தேவதையைத் தியானிக்கவேண்டும்.

## 21. சந்தியாத்தியானம்.

சந்தியையாவது:—பிராமி வைணவி இரௌத்திரி யென்னும் வேறு பாட்டால் பாகுபாடுற்றுச் சகல கன்ம சாட்சிணியாய் விளங்கும் சிவசத்தியாகும். சம்=செவ்வே, தியா=தியானித்தல்,எனவே சந்தியாத் தியான மென்பது செவ்வையாகத் தியானிக்கப்படுந் தியான மெனவும் பெறும்.

சந்தியாத் தியானஞ் செய்யுமிடத்து சமயி பிராதக்காலத்தில் பிராமியை இருதயத்தில் தியானிக்கவேண்டும். புத்திரன் பிராதக்காலத்தில் பிராமியை இருதயத்திலும், மத்தியான காலத்தில்

வைணவியைப் புருவநடுவிலும், சாயுங்காலத்தில் இரௌத்திரியைப் பிரமரந்திரத்திலும் தியானிக்கவேண்டும். சாதகாசாரியன் (உலோக தர்மணி தீக்ஷிதன்) மூன்று சந்திகளிலும் முறையே ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்திகளை இதயம் முதலிய மூன்றிடங்களிலும் தியானிக்கவேண்டும். சிவதர்மணி தீட்சிதன் மூன்று சந்திகளிலும் முறையே இரத்தை, சுக்கிலை, சுசிதை எனும் மூன்று சத்திகளையும் தியானிக்கவேண்டும். ஆசாரியன் காலை உச்சி மாலை அர்த்த ராத்திரி எனும் நாலு சந்திகளிலும் முறையே இதயம், புருவநடு, பிரமரந்திரம் துவாதசாந்தத் தலங்களில் இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருஷ்ணை எனும் நால்வரையும் தியானிக்கவேண்டும்.

## பிராமித்தியானம்.

பிராமியை அன்னவாகனத்தின்மீது பத்மாசனத்தைப் பொருந்தியிருப்பவளாய், வாலைப்பருவத்தை யுடையவளாய், பரிசுத்தமான பூணூலை யுடையவளாய், சிவந்த வடிவில் சிவந்த ஆடைகளும் நிறைந்த ஆபரணங்களும் உடையவளாய், சடையுடையவளாய், நான்கு முகங்களும் எட்டுக் கண்களும் நான்கு கைகளும் உடையவளாய், வலக்கைக ளிரண்டினும் சிருக்கும் அக்கமாலையும் இடக்கைக ளிரண்டினும் தண்டுங் கமண்டலமும் உடையவளாய், சத்துவ குண முடையவளாய், சகல கர்ம சாக்ஷிணியாய் இதயத்தில் தியானிக்கவும்.

"இனிபிதயத் துடிவிளங்கும் பிராதக்கா லையினிலெகினவா கனபதுமா சனவாலைப் பருவப்—புனிதவுப வீதபிரா மியைச்சிவந்த வடிவிற் பூடணரத் தாம்பரையாய்ச் சடையுமுடை யவளாய்—மனிய சிருக் கக்கவடம் வலமிடந்தண் டங்க மண்டலங்கை நான்குமுக நான்கிலிரு நான்காம்—குனிபுருவத் திருவிழியு முடையவளாய்ச் சத்வ குணத்தினளாய்ச் சகலகன்ம சாட்சிணியாய்க் குறித்தே."

## வைணவித் தியானம்.

வைணவியைக் கருடவாகனத்தின் மேல் பத்மாசனத்தைப் பொருந்தி யிருப்பவளாய், தருணபருவத்தை யுடையவளாய், வெண்ணிறமும் ஒருமுகமும் இரண்டு கண்களும் நான்குகைகளு முடையவளாய், வலக்கைக ளிரண்டிலும் கதையும் அபயமும், இடக்கைக ளிரண்டிலும் சங்கும் சக்கரமும் உடையவளாய், வெண்புடைவையும்

நிறைந்த ஆபரணமும் பூணூலும் துளபமாலையுந் தரித்தவளாய், இராசதகுண முடையவளாய், சகல கர்ம சாட்சிணியாய்ப் புருவநடுவில் தியானிக்கவும்.

"குறிகரும சாட்சிணியாய் ராசதையாய்ப் புள்ளூர் கோகனகாசனையான தருணவை ணவியை—நெறிதருசுக் கிலநிறமுஞ் சுக்கில வத்திரமு நிறைபணியு முந்நூலுந் துளபமா லிகையு—மறிவிழிக ளிரண்டுடைய திருவதன மொன்றும் வலம்புரிச்சக்கரம்வாமந் தெக்கணந்தண் டபயம்—பொறையுடைய நாற்கரமு முடையவளா யிரண்டு புருவநடு நினைந்துமத் தியானநேரத்தே."

## இரௌத்திரித் தியானம்.

இரௌத்திரியை இடபவாகனத்தின் மேல் பதுமாசனத்தைப் பொருந்தியிருப்பவளாய், சற்றே யௌவனந் திரும்பிய பருவத்தினளாய், நீல நிறத்தினளாய், ஒருமுகமும் மூன்று கண்களும் இளம் பிறை தாங்கிய சடையும் நான்குகைகளும் உடையவளாய், வலக்கைகளிரண்டிலும் சூலமும் அக்கமாலையும் இடக்கைகளிரண்டிலும் அபயமும் வேலும் உடையவளாய், தாமத குணமுடையவளாய், சகல கர்ம சாட்சிணியாய்ப் பிரமரந்திரத்தில் தியானித்தல் வேண்டும்.

"நேரிடப வாகனபத் மாசனருத்திரியை நீணிறயௌவனஞ் சற்றே திரும்புதாமதையா—யேர்பெருகு கரநான்கிற் சூலமக்கம் வலத்து மிடத்தபயங் கதிர்வேலுங் கிளம்பிறைவே ணியளாய்ப்—பார்வையொரு மூன்றிலகு வதனமொன்றுள்ளவளாய்ப் பலகரும சாட்சிணியா யத்தாத்த மனத்திற்—சார்பிரம ரந்திரத்தி னினைந்து மூவரையுந் தரித்தகிருஷ் ணாசனருமாய் நினைவர்சம யிகளே."

## ஞானசத்தித் தியானம்.

ஞானசத்தியை ஸ்படிகநிறம் ஒருதலை மூன்று கண்கள் உடையவளாய், வராபயமான் மழுக்களைத் தாங்கிய நான்கு கரங்களையுடையவளாய், மனோக்யமான அலங்காரத்தோடு கூடியவளாய்த் தியானித்தல் வேண்டும்.

## கிரியாசத்தித் தியானம்.

கிரியாசத்தியைச் செம்பரத்தம்பூ நிறத்தளாய், சங்கம் வில் வராபயங்களைக் கொண்ட நான்கு கைகளையுடையவளாய், கரண்ட மகுடமும் பிரசன்ன முகமும் உடையவளாய்த் தியானித்தல் வேண்டும்.

## இச்சாசத்தித் தியானம்.

இச்சாசத்தியை இரத்தவர்ண முடையவளாய், வராபயம் சூலம் பாசங்களைத் தாங்கிய நான்கு கரங்களையுடையவளாய், சகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டவளாய்த் தியானித்தல் வேண்டும்.

இங்ஙன மன்றி ஞானசத்தியைச் சூரியப்பிரகாசமும் கிரியாசத்தியைச் சந்திரப் பிரகாசமும் இச்சாசத்தியை அமிர்த சமுத்திரம்போன்ற பிரகாசமும் உடையவர்களாய் நாதசொரூப முடையவர்களாய்த் தியானித்தலு முண்டு.

## இரத்தைத் தியானம்.

இரத்தையை உதயகாலத்தில் விளங்கும் அநேக பால சூரியப் பிரகாசம் போன்றதாய்த் தியானித்தல் வேண்டும்.

## சுக்கிலைத் தியானம்.

சுக்கிலையை அநேக பூரண சந்திரப் பிரகாசம் போன்றதாய்த் தியானித்தல் வேண்டும்.

## அசிதைத் தியானம்.

அசிதையை அமிர்த சமுத்திரம் போற் பிரகாசிக்கும் நாதசொரூப முடையதாய்த் தியானித்தல் வேண்டும்.

## கிருஷ்ணைத் தியானம்.

கிருஷ்ணையைச் சரற்காலத்து விளங்கும் நிர்மலசலம் போற் பிரகாசிப்பதாய் அத்யந்த நிஷ்களமானதாய் அறிவையே காரணமாகக் கொண்டு தியானித்தல் வேண்டும்.

இங்ஙனம் அவ்வவர் அதிகாரத்துக்கியைய அவ்வக் காலங்களுக்கேற்ற, சந்தியை யெனப்படும் சிவசத்திகளைத் தியானித்த பின்னர், அச்சத்திகளினுடைய வர்ணவொளி மண்டலத்தினுள்ளே தமது ஆன்மாவும் சரீரமும் பொருந்தி அந்தர்ப்பவித்தனவாகச் சிந்தித்தல்வேண்டும்,

இங்ஙனந் தியானிப்பதால் சமயிமுதல் ஆசாரியரீருகவுள்ளோர் தத்தம் பரிபக்குவத்துக் கேற்ப அபர முத்தி பர முத்திகளைப் பெறுவர். இத்தியானத்தை நாடோறும் நியமமாகச் செய்துவரின் ஞான சமாதியும் முத்தியும் எளிதில் சித்திக்கும்,

## 22. மந்திராபிடேகம்.

தான்பெற்ற அருட்பேற்றுநிலை உறுதிப்படுமாறு வலக்கையினால் சிவதீர்த்த வடிவினதாகிய நீரை முகந்து ஓம்ஹாம் இருதயாய நம: என்று இடதுகையில் வார்த்து வலதுகைகொண்டு கும்ப முத்திரையாகப் பிடித்துக் கொண்டு ஒருமுறை நமோந்த சங்கிதாமந்திரத்தை உச்சரித்து ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் என்று சிரசில் கும்பமுத்திரையால் தெளித்தல் மந்திராபிடேகமாகும்.

## 23. மார்ச்சனம். (சுத்திசெய்தல்)

இனி தூலசரீர சம்பந்தமாய் வந்த தீவினைகள் ஒழியும் பொருட்டுச் சலத்தை அப்புட்சண முத்திரை கொண்டவலக்கையால் மூடி, நமோந்த சங்கிதா மந்திரத்தை ஒருமுறை அபி மந்திரித்து, வலதுகையால் நீரை யெடுத்து ஓம் ஹாம் இருதயாய நம: என்று இடது கையில் வார்த்து, திரு முத்திரையால் இடது கை விரல்களி னிடுக்குகளின் வழியாக விழுகிற நீரை வலதுகரத்தால் வௌஷடந்த ஈசானாதி பதினொரு மந்திரங்களாலும் தனித்தனியே (பதினொருமுறை) சிரசில் புரோட்சிப்பது மார்ச்சனமாகும். இது உடற்புறச்சுத்தியாகும்.

## 24. அகமர்ஷணம்.

அகம்=பாவம். மர்ஷணம்=கெடுத்தல்.

அகமர்ஷணமாவது:—அகத்திலுள்ள பாவத்தையும் சூட்சுமசரீரத்தால் வந்த தீவினைகளையும் ஒழிக்கும் பொருட்டுச் செய்யப் படுங் கிரியை. அஃதாவது மார்ச்சனஞ் செய்த பின் இடதுகையில் எஞ்சியிருந்த நீரை வலக்கையில் விட்டு, வராக முத்திரையால் மூக்கருகிற் பிடித்து, அந்நீரைச் சுத்தமாகவும் வெண்ணிறமாகவும் தர்ம சொரூபமாகவும் பாவித்து, பூரகவாயுவினால் அந்நீர் இடது நாசியின் வழியாக உள்ளே புகுந்ததாகப் பாவித்துக் கும்பகஞ் செய்து, அந்த வாயுவினால் அந்த நீர் உள்ளிருக்கின்ற பாவத்தைக் கெடுத்ததாகத் தியானஞ் செய்து, அங்ஙனங் கெடுக்கப்பட்ட பாவமானது மைக் குழம்பு போல வலது நாசியின் வழியாகப் புறப்பட்டுக் கையில் வந்ததாகப் பாவித்து, வலதுகாற் பெருவிரலில் ஜ்வாலிக்கும் காலாக்கினியில் ஊர்த்வமுகி முத்திரையால் ஓம்ஹ: அஸ்த்ராய ஹூம்பட்

என்று புருவநெறிப்புடன் நீரைவிட்டு அந்தப் பாவம் தகிக்கப் பட்டுப் புகைந்து போனதாகப் பாவித்து, ஓம் ஹ: அஸ்த்ராயபட் என்று கைகளைக் கழுவுதல்.

## 25. ஆசமனசகளீகரணம்.

பின்னர், சூட்சும சரீர தத்துவங்கள் சுத்தியாதற் பொருட்டும் இனிச் செய்யப் போகும் தர்ப்பணகன்மத்துக்கு அங்கமாகவும் ஆசமன சகளீகரணங்களை முன்போற் செய்ய வேண்டும்.

## 26. கவசவேஷ்டனம்.

தான் செய்யப் போகின்ற தர்ப்பணகன்மங்களுக்கு அசுரர் முதலியோரால் இடையூறு நேராதிருத்தற் பொருட்டு நிமிர்த்திய பதாகை முத்திரை கொண்ட வலதுகையால் அமிர்தமயமான நீரை அள்ளி, ஓம் ஹைம் கவசாயவௌஷட் என்று தன்னை வலமாகச் சுற்றி நீரைவிட்டு, தன்னைச் சூழ அக்கினி கோட்டை உண்டான தாகப் பாவிப்பது கவச வேஷ்டனமாகும். வேஷ்டனம்—சுற்றுதல்.

## 27 சதாசிவத்தியானம்.

இனி சதாசிவரைத் தியானிக்குமாறு :—நான்கு திசைகளுக்கும் நான்கு முகங்களும் உச்சியில் ஒருமுகமும் ஆக ஐந்துமுகங்களையும் முகங்கள் தோறும் மூன்று கண்களையும் உடையவராய், ஐந்து முகங்களுள் உச்சியிலுள்ள ஈசான முகம் ஈசான திசையை நோக்கிய தாயும் சுத்தப்பளிங்குநிறம் போன்றதாயும், கிழக்கிலுள்ள தத்புருஷ முகம் கிழக்குத்திக்கை நோக்கியதாயும் கோங்கின் பூநிறம் போன்ற தாயும், தெற்கிலுள்ள அகோர முகம் வலத்தோண்மேல் தெற்கு நோக்கி அவிழ்ந்ததாடியும் மிகுந்த கறுப்பும் விருத்தாப்பியமும் பயங்கர தோற்றமும் உடையதாயும், வடக்கிலுள்ள வாமதேவ முகம் இடத்தோண்மேல் வடக்கு நோக்கி ஸ்திரீகளுடைய முகம் போலச் சிவப்பு நிறமுடையதாகவும், மேற்கிலுள்ள சத்தியோஜாத முகம் மேற்கு நோக்கி சிறுகுழந்தை முகம் போன்று பால் நிற முடையதாகவும், பாலசந்திரனையும் கொன்றைமாலையையுஞ் சூடிய சடாமகுடமு முடையவராய், கழுத்தின்கீழ்ச் சுத்தப் பளிங்கு நிறம் போன்ற திருமேனியையும் பத்துக் கைகளையு முடையவராய்,

* வலக்கைகளைந்திலும் வேல், அபயம், சூலம், மாத்திரைக்கோல், தமருகங்களை உடையவராய், இடக்கைகளைந்திலும் வரதம் மாதுளம்பழம் நாகம் ஜெபமாலை நீலோற்பலங்களை உடையவராய், முப்பத்திரண்டுறுப்புக்களுநிறைந்தவராய், இரண்டு பாதங்களும் பதினாறு வயதுடைய யௌவனபருவமும் உடையவராய், பதுமாசனத்தி லெழுந்தருளி யிருப்பவராகத் தியானஞ்செய்து, உன்மனாந்த அமனஸ்கரான சிவத்துக்கு ஆன்மாவை உடைமைப் பொருளாகப் பாவிக்கவும்.

உச்சிமுக மீசான மொளிதெளிய பளிங்கே
யுத்தரபூ ருவதிசையை நோக்கியுறு முகந்தே
நிச்சயித்த முகத்தின்கீழ்ப் பூர்வதிசை நோக்கி
நிகழுமுகந் தற்புருடங் கோங்கலர்போ னிறமே
யச்சுறுத்து மகோரமுக மறக்கரிது கராள
மவிழ்தாடி வலத்தாளிற் றென்னோக்கி யமருஞ்
செச்சைநிறத் தெரிவைமுக மிடத்தோண்மேல் வாமஞ்
சிறுபுறத்தின் முகஞ்சத்தி யோசாதந் திகழ்பால்.

திருவுருவந் தெளிபளிங்கு சடாமகுடத் திதழி
சிறுபிறையு மூவைந்து திருநயனம் வலப்பாற்
கரதலத்திற் சத்தியப யஞ்சூல நீண்ட
கட்டங்கந் தமருகமு மற்றையிடக் கரத்தின்
வரதமுமா துளங்கபலம் போகி செபமாலை
மணமலிநீ லோற்பலமு முடையர்வப தீரெட்
டுறுவிரட்டி யுறுப்பிரண்டு பதம்பதுமா தனந்தா
னுறவிருப்பர் சதாசிவந்தத் துவத்தவிசி னுகந்தே.

## 28. காயத்திரி ஜெபம்.

காயத்திரி தேவியைப் பொன்னிறமும் நான்கு கைகளும் மூன்று நேத்திரங்களுமுள்ளவளாய், வரம் அபயம் ஜபமாலை கமண்டலம் இவைகளைக் கரங்களில் தரித்திருப்பவளாய்த் தியானித்துக் கொண்டு, ஓம்ஹாம் தன்மகேசாய வித்மகே வாக் விசுத்தாய

* வலக்கைகளில் சூலம், மழு, வாள், வச்சிரம், அபயங்களென்றும், இடக்கரங்களில் பாம்பு, பாசம், அங்குசம், மணி, வரதங்களென்றும் தியானிப்பதுமுண்டு,

திமகி தந்நோ சிவப்ரசோதயாத் என்னும் சிவகாயத்திரி மந்திரத்தால் மூன்றுமுறை, பவுத்திரங்கொண்ட கரத்திற் பிடித்த சங்கமுத்திரையால் தர்ப்பணஞ்செய்து பத்துருச் செபித்து மீட்டும் ஒரு முறை அந்தக் காயத்திரியால் தருப்பணஞ்செய்யவும்.

## 29. தர்ப்பணம்.

தர்ப்பணம் என்பது உவப்பித்தல் எனப் பொருள்படும். அதாவது சிவசொரூபமாக முன் அமைக்கப்பட்டப் புனித தீர்த்தத்தை, தேவதீர்த்தம் ஆரிடதீர்த்தம் மானவதீர்த்தம் பூததீர்த்தம் பிதுர்தீர்த்தமெனும் ஐந்துவகையாகக் கொண்டு, முறையே தேவர்களையும் தேவகணங்களையும் இருடிகளையும் மனுடர்களையும் பஞ்சபூதங்களையும் பிதுரர்களையும் மகிழ்வித்தலாகும்.

தேவதீர்த்தமாவது:—கைவிரல் நுனிகளாற் கொடுக்கும் நீர். ஆரிடதீர்த்தமாவது விரல்களின் இறைச்சந்தியாற் கொடுக்கும் நீர். மானவ தீர்த்தமாவது கனிட்டிகை மூலத்தாற் கொடுக்கும் நீர். பூததீர்த்தமாவது மணிக்கட்டினுற் கொடுக்கின்ற நீர். பிதுர்தீர்த்தமாவது தர்ச்சனி அங்குட்டங்களின் நடுவின் வழியாகக் கொடுக்கின்றநீர்.

தேவர்களாவார்:—சதாசிவன், மகேசுரன், உருத்திரன், விஷ்ணு எனவிவர்.

தேவகணங்களாவார்:—ஆதித்யர், வஸு, ருத்ரர், விஸ்வர், ஸாத்யர், மருத்து, பிருகு, அங்கிரசு எனுமெண்மர்.

இருடிகளாவார் அத்திரி, வசிஷ்டர், புலத்தியர், கிருது, பாரத்வாஜர், விஸ்வாமித்ரர், ப்ரசேதஸர், ருசிகர், அகஸ்தியர், ததீசி, துருவாசர் எனப்பதினொருவர்.

மனுடராவார்:—சனகர்சனந்தர், சனாதனர், சனற்குமாரர், கபிலர், பஞ்சசிகர், இருஷர் எனு மெழுவர்.

பூதங்களாவன:—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன.

பிதுரர், தேவபிதுரர், விசேஷபிதுரர், பிரேதபிதுரர் என முத்திறப்படுவர்.

R673
N28



தேவபிதுர்க்கள் :— கிரவ்யவாஹனர், அநலர், சோமர், யமர், அர்யம்ணர், அக்னிஷ்வாக்தர், பர்ஹிஷிப்யர், ஆஜ்பயர், சோமபர் எனுமொன்பதின்மர்.

விசேஷ பிதுர்க்கள் :— ஈசர், சதாசிவர், சாந்தர் எனும் மூவர்.

பிரேதபிதுர்க்கள் :— பிதாபித்ரர், பிதாமஹர், பிரபிதாமகர், மாதாமாதுர், பிதாமஹீ, பிரபிதாமஹீ, மாதாமகர், மாதுபிதாமகர், மாதுபிரபிதாமகர், மாதாமஹீ, மாதுபிதாமஹீ, மாதுபிரபிதாமஹீ, சர்வ ஆசாரி, சர்வஞாதி, சர்வபித்ரு, திக், திக்பதி, சித்தர், மாதுரு, கிரகம், நட்சத்திரம் என்பன.

இனி தர்ப்பணஞ் செய்யுமாறு :—பவித்திரந் தரித்து, சங்கமுத்திரைகொண்டு மூன்று முறை ஓம்ஹாம் ஹௌம் சிவாய ஸ்வாஹா என்று விரல் நுனிகளால் தருப்பணஞ் செய்து சிவமூலத்தைப்பத்துருச் செபித்து, ஓம்ஹாம் ஹௌம் சிவாயஸ்வாஹா என்று மீட்டும் ஒருமுறை தர்ப்பித்து, பிறகு ஸ்வாஹாந்தமான ஸங்கிதைகளால் ஒவ்வோர் முறை தனித்தனியாகத் தர்ப்பித்து; பின்பு ஓம்ஹாம் சர்வேப்யோ மந்த்ரேப்யோ ஸ்வாஹா, ஓம்ஹாம் சர்வேப்யோ தேவேப்யோ ஸ்வாஹா என்று விரல்நுனிகளாலே தர்ப்பிக்கவும்.

தர்ப்பிக்கும்போது தேவர்களுக்குப் புட்பத்தையும் இருடிகளுக்குத் தருப்பையையும், பிதுரர்களுக்கு எள்ளையும், மற்றவர்களுக்கு அக்ஷதையையும் கொண்டு தர்ப்பிப்பது உத்தமம்.

பின்பு, கண்டத்திலே மாலையாக உபவீதத்தை யிட்டுக்கொண்டு, தர்ப்பையின் அடி நுனிகளைக் கையில் வைத்துக்கொண்டு ஓம்ஹாம் சர்வேப்யோ இருஷிப்யோநம: என்று திருமுத்திரையால் விரலிடைகளாலும், ஓம்ஹாம் சர்வேப்யோ மநுஷ்யேப்யோ வஷட் என்று சபா முத்திரையால் சிறுவிரலடியினாலும், ஓம்ஹாம் சர்வேப்யோ பூதேப்யோ வௌஷட் என்று பண முத்திரையால் கரதல மூலத்தாலும் தர்ப்பிக்கவும்.

பின்பு, வலமாக உபவீதமிட்டுத் தர்ப்பையை மடித்து எள்ளுடன் ஓம்ஹாம் சர்வேப்யோ பிதுர்ப்யோ சுவதா, ஓம்ஹாம் சர்வேப்யோ ஞாதிப்யோ சுவதா, ஓம்ஹாம் சர்வேப்யோ ஆசாரியேப்யோ சுவதா என்று கண்டிமுத்திரை கொண்டு பிதுர் தீர்த்தத்தால் தர்ப்பிக்கவும்.



85564

ஞாதிகளுக்குத் துருவ முத்திரையாலும், ஆசார்யர்களுக்குச் செகண்டி முத்திரையாலும் தர்ப்பிப்பது உத்தமம்.

பின்னர், அக்கினியால் தகிக்கப்பட்டவர்களும் தகிக்கப்படாதவர்களுமான என்குல பிதுர்க்களே! பூமியில் தர்ப்பிக்கப்பட்ட இந்த நீரினல் நற்கதியும் திருப்தியும் அடையுங்கள் என்று கூறிப் பிரார்த்தித்து எள்ளுடன் தருப்பைபை நீர்க்கரையில் ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று போடவும்.

பின்பு, இடமாக உபவீத மிட்டுக்கொண்டு ஓம்ஹாம் கணபதியே ஸ்வாஹா, ஓம்ஹாம் ஸ்கந்தாய ஸ்வாஹா, ஓம்ஹாம் தேவ்யை ஸ்வாஹா, ஓம்ஹாம் நந்திநே ஸ்வாஹா, ஓம்ஹாம் மஹா காளாய ஸ்வாஹா, ஓம்ஹாம் பிருங்கிணே ஸ்வாஹா, ஓம்ஹாம் விரூபாய ஸ்வாஹா, ஓம்ஹாம் சண்டாய ஸ்வாஹா என்று தர்ப்பிக்கவும்.

## 30. விசேஷ தர்ப்பணம்.

இதைவிட விஸ்தாரமாகத் தர்ப்பிக்க வேண்டின், முன் கூறியதுபோல மூலமந்திரம் முதலான மந்திரங்களைச் சுவாகாந்தமாகத் தர்ப்பித்து, விரல்நுனிகளாலே ஓம்ஹாம் ஆதித்யேப்பஸ்வாகா, ஓம்ஹாம் வசுப்பஸ்வாகா, ஓம்ஹாம் ருத்ரேப்பஸ்வாஹா, ஓம்ஹாம் விஸ்வேப்யஸ்வாகா, ஓம்ஹாம் சாத்யேப்யஸ்வாஹா, ஓம்ஹாம் மருத்ப்யஸ்வாஹா, ஓம்ஹாம் ப்ருகுப்யஸ்வாகா, ஓம்ஹாம் அங்கிரேப்யஸ்வாகா என்று அஷ்ட தேவ கணங்களுக்குத் தர்ப்பிக்க.

பின்பு, கண்டத்திலே உபவீதமிட்டு ஓம்ஹாம் அத்ரயேநம:, ஓம்ஹாம் வசிஷ்டாயநம:, ஓம்ஹாம் புலஸ்த்யாயநம:, ஓம்ஹாம் க்ரதவேநம:, ஓம்ஹாம் பாரத்வஜாயநம:, ஓம்ஹாம் விஸ்வாமித்ராயநம:, ஓம்ஹாம் ப்ரசேதஸேநம:, ஓம்ஹாம் ருசகாயநம:, ஓம்ஹாம் அகஸ்த்யாயநம:, ஓம்ஹாம் ததீசயேநம:, ஓம்ஹாம் துர்வாஸ்ஸேநம: என்று இருஷிகள் பதினொருவர்க்கும் திருமுத்திரையினல் தர்ப்பிக்க.

ஓம்ஹாம் சனகாயவஷட், ஓம்ஹாம் சனந்தாயவஷட், ஓம்ஹாம் சனதனபவஷட், ஓம்ஹாம் சனத்குமாராயவஷட், ஓம்ஹாம் கபிலாயவஷட், ஓம்ஹாம் பஞ்சசிகாயவஷட், ஓம்ஹாம் ருஷபேவஷட் என்று மானவதீர்த்தத்தால் சப்த மனுஷ்யர்களுக்குச் சபா முத்திரையினலே தர்ப்பிக்க.

ஓம்ஹாம் பிருதிவிதத்வாய வௌஷட், ஓம் ஹாம் அப்புதத்துவாய வௌஷட், ஓம்ஹாம் வாயுதத்துவாய வௌஷட், ஓம்ஹாம் ஆகாயதத்துவாய வௌஷட் என்று பஞ்சமுத்திரைகொண்டு கரதல மூலத்தால் பஞ்சபூதங்களுக்குந் தர்ப்பிக்க.

பின்பு, வலமாக உபவீதமிட்டுத் தர்ப்பையை மடித்து எள்ளுடன் ஜலத்தால் ஓம்ஹாம் கவ்பவாகாய ஸ்வதா ஓம்ஹாம் அனலாய ஸ்வதா ஓம்ஹாம் சோமாய ஸ்வதா, ஓம்ஹாம் யமாய ஸ்வதா, ஓம் ஹாம் அர்யம்ணே ஸ்வதா, ஓம்ஹாம் அக்னிஷ்வாக்தாய ஸ்வதா, ஓம் ஹாம் பிரஹிஷிப்ய ஸ்வதா, ஓம்ஹாம் ஆஜ்பபாய ஸ்வதா, ஓம்ஹாம் சோமபாய ஸ்வதா என்று தேவ பித்ருக்களுக்கும், ஓம்ஹாம் ஈசாய பித்ரே ஸ்வதா, ஓம்ஹாம் சதாசிவாய பிதாமஹேப்ய ஸ்வதா, ஓம் ஹாம் சாந்தாயப்ரபிதாமகேப்ய ஸ்வதா என்று விசேஷபிதுர்க்களுக்கும்.

ஓம்ஹாம் பிதாபித்ருப்ப ஸ்வதா, ஓம்ஹாம் பிதாமஹேப்ய ஸ்வதா, ஓம்ஹாம் பிரபிதாமகேப்ய ஸ்வதா, ஓம்ஹாம் மாதருப்ய ஸ்வதா, ஓம்ஹாம் பிதாமஹீப்ய ஸ்வதா, ஓம்ஹாம் ப்ரபிதாமஹீப்ய ஸ்வதா, ஓம்ஹாம் மாதாமஹேப்ய ஸ்வதா, ஓம்ஹாம் மாதுபிதாமகேப்ய ஸ்வதா, ஓம்ஹாம் மாதுப்ரபிதாமகேப்ய ஸ்வதா, ஓம்ஹாம் மாதாமஹீப்ய ஸ்வதா, ஓம்ஹாம் மாதுபிதாமஹீப்ய ஸ்வதா, ஓம் ஹாம் மாதுபிரபிதாமஹீப்ய ஸ்வதா என்றும்,

ஓம்ஹாம் சர்வேப்யோ ஆசார்யேப்ப ஸ்வதா, ஓம்ஹாம் சர்வேப்யோ ஞாதிப்ய ஸ்வதா, ஓம்ஹாம் சர்வேப்யோ பித்திருப்ய ஸ்வதா, ஓம்ஹாம் திக்பதிப்ய ஸ்வதா, ஓம்ஹாம் சித்தேப்ப ஸ்வதா, ஓம்ஹாம் மாத்ருப்ய ஸ்வதா, ஓம்ஹாம் க்ரஹேப்ய ஸ்வதா, ஓம்ஹாம் நக்ஷத்ரேப்ய ஸ்வதா என்றும் தர்ப்பித்து முன் சொல்லியபடி பிதுர்க்களைப் பிரார்த்தித்து மற்றைய கிரியைகளையுஞ் செய்க.

பிதுர் வம்சத்துக்கு வலக்கைப் பெருவிரல் நுனிகீழ் நோக்கியும், மாதா மகர்வம்சத்துக்கு இடக்கைப் பெருவிரல் கீழ்நோக்கியும் தர்ப்பிக்கவும்.

## 32. தீர்த்தோப சங்காரம்.

பின்பு, ஆசமனமும் சகளீகரணமும் செய்து, விந்துத்தானத்திலிருந்துஎடுத்து முன்னர் நீரில் வைக்கப்பட்ட அமிர்தத்தை அங்குச

முத்திரையால் ஓம்ஹம் சிவாயவௌஷட் என்று குறுகிய (ஹ்ரஸ்வ) உச்சரிப்பாக உச்சரித்து, அல்லது ஓம்ஹம் இருதயாய வௌஷட் என்ற இருதய மந்திரத்தை உச்சரித்து எடுத்து விந்துத்தானத்தில் ஒடுக்கிக்கொள்ளவும்.

## 33. சூரியோபஸ்தானம்.

பின்னர், இரண்டுகைகளையும் இணைத்து நிறைய நீரை அள்ளிக் கொண்டு, ஆசாரியர் சாவித்திரியோடு கூடிய நமோந்தசங்கிதா மந்திரத்தையும், ஏனையோர் நயோந்த சங்கிதா மந்திரத்தையும் உச்சரித்துச் சூரிய மண்டலத்தின் நடுவிலிருக்கும் பரமசிவனிடத்தில், ஓம்ஹாம் ஹௌம் சிவாய ஸ்வாஹா என்று சங்கமுத்திரையால் நீரைவிட்டு அநுட்டான பலனைத் தத்தஞ்செய்து, ஓம்ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவ சூர்யாய ஸ்வாஹா என்று ஒரு முறை தருப்பணஞ் செய்து ஆசமனம் செய்யவும்.

## 34. செபநிவேதனம்.

தான் இருக்கும் பூமியில் ஓம்ஹ: அத்ஸ்ராயபட் என்று பதாகை முத்திரையால் சலத்தைப் புரோட்சித்து வடக்கு முகமாக அங்காசனத்திலிருந்துகொண்டு முன்போலக் குட்டிக் கும்பிட்டு பிராணாயாமஞ் சகளீகரணங்களைச்செய்து, சதாசிவமூர்த்தியைத் தியானித்து, சிவமூல மந்திரத்தை நூற்றெட்டு உருவும், சங்கிதா மந்திரத்தை ஒரு உருவும், தேவிமூல மந்திரம் கணபதி மூலமந்திரம் சுப்ரமண்யர் மூலமந்திரம் என்னுமிவைகளைத் தனித்தனியே பத்து உருவும் செபித்து, அறிந்தும் அறியாமலும் நேர்ந்த கிரியைக் குறைவாலுண்டாகிய குற்றம் நீங்கும்பொருட்டு ஓம்ஹூம் அகோராயநம: என்று அகோரமந்திரத்தை இருபத்தொரு உருச்செபித்து, பின்னும் முன்போலக்குட்டிக் கும்பிட்டுப் பிராணாயாமமுஞ் சகளீகரணமும் செய்து தோத்திரஞ்செய்யவும்.

## 35. தோத்திரம்.

சிவம்.

திருச்சிற்றம்பலம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி னேக்கு முறுவலிப்புந்
துடிகொண்ட கையுந் துதைந்தவெண் ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலுமென் பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக் கூத்தன் குரைகழலே.

"சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரிகுழற் பணைமுலை மடந்தை, பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய் பங்கயத் தயனுமா லறியா, நீதியே செல்வத் திருப்பெருந் துறையி னிறை மலர்க் குருந்தமே வியசீர், ஆதியே யடியே னாதரித் தழைத்தா லதெந்துவே யென்றரு ளாயே."

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை, மற்றவ ரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச், செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத் திருவீழி மிழலை வீற் றிருந்த, கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிரவென் கண்குளிர்ந் தனவே."

பாலுக்குப் பாலகன் வேண்டிபழுதிடப் பாற்கட் லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

வேதநாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகாபோற்றி மறுசம யங்கண் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதக மனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

## சத்தி.

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

## விநாயகர்.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் போற்றுவாம்.

### சுப்பிரமணியர்.

பன்னிரு கரத்தாய் போற்றிப் பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணை வாருதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி.

### சமயகுரவர்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
யூழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

### சந்தானகுரவர்.

ஈராண்டிற்சிவஞான போதமுறை மெய்கண்டா ரிணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த வருணந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தைநகர் மறைஞான சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லைநக ருமாபதியார் செம்பதுமத் திருத்தாள் போற்றி

### திருத்தொண்டர்.

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்ப்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர் சேக்கிழா ரடிபோற்றி.

மொழிவழி யொழுகுமன்பர் முன்புறு கருப்பை யுந்திச்
சுழிவழி யிழியாவண்ணந் துணைப்பத மிதவை நல்கி
விழிவழி யருளினேற்று மெய்கண்ட சந்தானத்து
வழிவழி வருவோர்காமர் சேவடி வணங்கி வாழ்வாம்.

### தாதாரகுரு.

தனக்கு அநுக்கிரகித்த குருமூர்த்தியைத் தோத்தரித்து வணங்கவும். இப்படித் தோத்திரம் பண்ணி எழுந்து,

ஓம் ஹ்ராம் இந்திராயநம: என்று கிழக்கிலும்
ஓம் ,, அக்நயேநம: என்று தென்கிழக்கிலும்
ஓம் ,, யமாயநம: என்று தெற்கிலும்
ஓம் ,, நிருதயேநம: என்று தென்மேற்கிலும்
ஓம் ,, வருணாயநம: என்று மேற்கிலும்
ஓம் ,, வாயவேநம: என்று வடமேற்கிலும்
ஓம் ,, குபேராயநம: என்று வடக்கிலும்
ஓம் ,, ஈசாநாயநம: என்று வடகிழக்கிலும் நமஸ்கார முத்திரையால் கும்பிட்டு,

ஓம் ஹாம் பார்வதீ சமேத பரமேசுவராயநம: என்று வடக்கு நோக்கி மூன்றுதரஞ் சாஷ்டங்கமாக நமஸ்கரித்து, எழுந்து ஆசமனஞ் செய்து,

ஓம்ஹ: அஸ்த்ராயபட் என்று இருக்குமிடத்தைப் பதாகை முத்திரைகொண்டு சலத்தினுற் றெளித்து அதனைத் தொட்டுக் கண்ணிலொற்றிக் கொண்டு பூமிதேவியை வணங்கி, சலத்தைத் தூரத்தில் கால்படாத விடத்தில் விட்டுவிடவும்.

## 36. பிராயச்சித்தம்.

சந்தியாகாலந் தவறின் நமோந்த சங்கிதா மந்திரத்தை ஒருமுறைச் செபிக்கவும். சந்தி ஒன்று தவறின் நூறுஉருவும், இரண்டு தவறின் இருநூறு உருவும், மூன்று தவறின் முந்நூறு உருவும், நான்கு தவறின் இரண்டாயிரம் உருவும் மூலமந்திரத்தைச் செபிக்கவும், மற்றைப் பிராயச் சித்தங்களைக் குரு முகமாகத் தெரிந்து கொள்ளவும்.

அநுட்டானவிதி

முற்றிற்று.

---

Solden & Co., Madras, S.E.

# அநுட்டான மந்திரங்கள்.

**ஆசமன மந்திரம்**

1. ஓம் ஹாம் ஆத்ம தத்வாய சுவதா
2. ஓம் ஹீம் வித்யா தத்வாய சுவதா
3. ஓம் ஹூம் சிவதத்வாய சுவதா

**பஞ்சகலா மந்திரம்**

1. ஓம் ஹ்லாம் நிவிர்த்திகலாயை நம :
2. ஓம் ஹ்வீம் பிரதிஷ்டா கலாயை நம :
3. ஓம் ஹ்ரூம் வித்யா கலாயை நம :
4. ஓம் ஹ்யைம் சாந்தி கலாயை நம :
5. ஓம் ஹ: சாந்த்யாதீத கலாயை நம :

**சங்கிதா மந்திரம்.**

**பஞ்சப்பிரமம்.**

| | | |
|---|---|---|
| 1. | ஈசானம் | ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம: |
| 2. | தத்புருடம் | ஓம் ஹேம் தத்புருஷவக்த்ராய நம: |
| 3. | அகோரம் | ஓம் ஹூம் அகோர இருதயாய நம: |
| 4. | வாமதேவம் | ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம: |
| 5. | சத்யோசாதம் | ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தயே நம: |

**ஷடங்கம்.**

| | | |
|---|---|---|
| 1. | இருதயம் | ஓம் ஹாம் இருதயாய நம: |
| 2. | சிரசு | ஓம் ஹீம் சிரசே நம: |
| 3. | சிகை | ஓம் ஹூம் சிகாயை நம: |
| 4. | கவசம் | ஓம் ஹைம் கவசாய நம: |
| 5. | நேத்திரம் | ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம: |
| 6. | அஸ்த்ரம் | ஓம் ஹ: அஸ்த்ராய நம: |

| | |
|---|---|
| கணபதி மூலம் | ஓம் கம் கணேசாய நம: |
| குருமூலம் | ஓம் கும் குருப்யோ நம: |
| சிவமூலம் | ஓம் ...................... |
| தேவி மூலம் | ஓம் ஹ்ரீம் தேவியைநம: |
| கந்தன் மூலம் | ஓம் ஹாம் ஸ்கந்தாய நம: |
| சூரியன் மூலம் | ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவ சூர்யாய நம: |
| மகாமநு | சிவ சிவ |

அஸ்த்ர காயத்திரி:—ஓம் சிவாஸ்த்ராய வித்மஹே காலாநலாய தீமகி தன்னோ அஸ்த்ரப்ரசோதயாத்.

சிவகாயத்திரி-ஓம்ஹாம் தன்மஹேசாய வித்மஹே வாக் விசுத்தாய தீமஹி தன்னோ சிவப்ரசோதயாத்.

சப்தகோடி மகா மந்திரம்
1. நம:
2. சுவாஹா
3. சுவதா
4. வஷட்
5. வௌஷட்
6. ஹும்
7. பட்

| பெயர். | கிரியை. | முத்திரை. | மந்திரம். |
|---|---|---|---|
| 1. சங்கற்பம் | 1. பாத்திர சுத்தி<br>பாத்திரத்தில் நீரெடுக்க | | ஓம் ஹ: அஸ்த்ராய பட்.<br>ஓம் ஹாம் ஹிருதயாய வௌஷட். |
| | 2. பூமி சுத்தி | பதாகை | ஓம் ஹ: அஸ்த்ராயபட். |
| | 3. விபூதி தாரணம் | | சிவ சிவ. |
| | 4. சங்கற்பம் | | பரமேசுவரர் மகிழ்ச்சியின் பொருட்டு (இன்னகால) சந்தியைச் செய்கின்றேன். |
| | 5. கணபதி வணக்கம் | சிகா | ஓம் கம் கணேசாய நம: |
| | 6. குருவணக்கம் | நமஸ்காரம் | ஓம் கும் குருப்யோ நம: |
| 2. நீர்ச்சுத்தி | 1. அஞ்ஞான நீக்கம் | சம்மாரம் | ஓம் ஹ: அஸ்த்ராயபட் |
| | 2. நிரீட்சணம் | நிரீட்சணம் | ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம: |
| | 3. புரோட்சணம் | கவிழ்ந்தபதாகை | ஓம் ஹ: அஸ்த்ராயபட் |
| | 4. தாடனம் | அதோமுகி | ஷை |
| | 5. அப்யுட்சணம் | சோத்திகம் | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 6. தாளத்திரயம் | கோவிடாணம் | ஓம் ஹ: அஸ்த்ராயபட் |
| | 7. திக்குப் பந்தனம் | சோடிகா | ஷை |
| | 8. அவகுண்டனம் | அதிதீக்ஷணம் | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 9. தேனு முத்திரை | தேனு | ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் |
| 3. உடற்பொதுச்சுத்தி. | 1. சலப்புரோட்சணம் | கோமுகம் | ஓம் ஹ: அஸ்த்ராய வௌஷட் |
| | 2. அஸ்த்ர சந்தி | | |
| | 1. தருப்பணத் திரயம் | சங்கம் | ஓம் ஹ: அஸ்த்ராய ஸ்வாஹா |
| | 2. ஜெபம் | | அஸ்த்ர காயத்திரி அல்லது ஓம் ஹ: அஸ்த்ராய [நம: 10. |
| | 3. தருப்பணம் | ஷை | ஓம் ஹ: அஸ்த்ராய ஸ்வாஹா |

| பெயர். | கிரியை. | முத்திரை. | மந்திரம். |
|---|---|---|---|
| 3. உடற் பொதுச்சுத்தி. | 3. ஆசமனம் | கோகர்ணம் | 1. ஓம் ஹாம் ஆத்ம தத்வாய சுவதா<br>2. ஓம் ஹீம் வித்யா தத்வாய சுவதா<br>3. ஓம் ஹூம் சிவ தத்வாய சுவதா |
| | 4. ஆதாரசுத்தி | பதாகை | ஓம் ஹ: அஸ்த்ராய பட் |
| | 5. தொடுமிடம் 12 | திவ்வியம் | ஓம் ஹாம் இருதயாய வௌஷட் |
| | 6. கரசோதனை | சாணம் | ஓம் ஹ: அஸ்த்ராய பட் |
| 4. நீற்றுச்சுத்தி | 1. பஸ்ம சங்கிரகணம் | மிருகம் | ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம: |
| | 2. புரோக்ஷணம் | தீட்சணம் | ஓம் ஹ: அஸ்த்ராயபட் |
| | 3. விக்கிரேச்சாடனம் | திவ்வியம் | ஓம் ஹ: அஸ்த்ராய ஹூம் பட் |
| | 4. நிரீட்சணம் | நிரீட்சணம் | ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம: |
| | 5. புரோட்சணம் | கவிழ்ந்தபதாகை | ஓம் ஹ: அஸ்த்ராய பட் |
| | 6. தாடனம் | அதோமுகி | ஷெ |
| | 7. அப்யுட்சணம் | சோத்திகம் | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 8. பஞ்ச கலாமந்திர செபம் | ஷெ | ஓம் ஹ்லாம் நிவர்த்திகலாயை நம:, ஓம் ஹ்வீம் பிரதிட்டா கலாயை நம:, ஓம் ஹ்ரூம் வித்தியா கலாயை நம:, ஓம் ஹ்யைம் சாந்திகலாயை நம:, ஓம் ஹ: சாந்தியாதீத கலாயை நம: |
| | 9. திக்குப்பந்தனம் | சோடிகா | ஓம் ஹ: அஸ்த்ராயபட் |
| | 10. அவகுண்டனம் | அதிதீட்சணம் | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 11. சங்கிதா மந்திர செபம் | சோத்திகம் | ஓம் ஹோம் ஈசான மூர்த்தாயநம: முதலிய 11. |
| | 12. விபூதி ருத்திரர் தியானம் | | |

| | | | |
|---|---|---|---|
| | 1. அம்ல ஸ்நானம் | திவ்வியம் | ஓம் ஹ: அஸ்த்ராயபட் |
| | 2. பஸ்மஸ்நானம் | | |
| | 1. ஜலாப்புக்ஷணம் | நிரோதானம் | ஓம் ஹாம் இருதயாய நம: |
| | 2. சம்மிஸ்ரணம் | | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 3. விபூதிலேபனம் | | |
| | 1. சிரமுதல் 5 இடங்களில் | திரிசூலம் | ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம:, ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம:, ஓம் ஹூம் அகோர இருதயாய நம:, ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம:, ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தயே நம: |
| | 2. ஏனையவிடங்களில் | ஷை | ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தயே நம: |
| 5. உடற்சிறப் புச்சுத்தி. | 3. மந்த்ர ஸ்நானம் (இதுவே ஆக்னேயஸ்நானம்) | | |
| | 1. அஸ்தப்ரக்ஷாளனம் | | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 2. அபிமந்திரணம் | கும்பம் | பஞ்சப் பிரமம் |
| | 3. பஸ்மாபிஷேகம் | ஷை | ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் |
| | 4. பஸ்மோபசங்காரம் | | |
| | 1. தாளத்திரயம் | கோவிடாணம் | ஓம் ஹ: அஸ்த்ராயபட் |
| | 2. பஸ்ம சங்கிரகணம் | மகாமுத்திரை | |
| | 3. உபசங்காரம் | சங்காரம் | ஓம் ஹாம் இருதயாய நம: |
| | 5. ஆசமனுதி | | |
| | 6. மானதஸ்நானம் | | ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: |
| | 1. கரநியாசம் | | |
| | 1. கரசோதனை | சாணம் | ஓம் ஹ: அஸ்த்ராயபட் |
| | 2. அமிர்தப்லாவனம் | பிரசன்னம் | ஓம் ஹௌம் சக்தயே வௌஷட் |
| 6. சகளீ காணம். | 3. சிவாசனம் | அதிட்டானம் | ஓம் ஹாம் சிவாசனாய நம: |
| | 4. சிவமூர்த்தி | ஷை | ஓம் ஹாம் ஹாம் ஹாம் சிவ மூர்த்தயே நம: |

| பெயர். | கிரியை. | முத்திரை. | மந்திரம். |
|---|---|---|---|
| | 5. சிவமூர்த்தி தியானம் | அதிட்டானம் | |
| | 6. மூர்த்தா | உவ்ஷணீகம் | ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம: |
| | 7. வக்த்ரம் | சின்மயம் | ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம: |
| | 8. இருதயம் | மோகம் | ஓம் ஹூம் அகோர இருதயாய நம: |
| | 9. குஹ்யம். | திவ்வியம் | ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம: |
| | 10. சாநு | ஆக்கிரம் | ஓம் ஹம் சத்யோஜாத மூர்த்தயே நம: |
| | 11. வித்யாதேகம் | அதிஷ்டானம் | ஓம் ஹாம் ஹௌம் வித்யாதேகாய நம: |
| | 12. நேத்ரம் | கடா | ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம: |
| | 13. சிவமூலம் | அதிட்டானம் | ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: |
| 6. சகளீ காரணம். | 14. சிவத்தியானம் | ஷெ | |
| | 15. இருதயம் | ஆக்கிரம் | ஓம் ஹாம் இருதயாய நம: |
| | 16. சிரசு | திவ்வியம் | ஓம் ஹீம் சிரேச சுவாஹா. |
| | 17. சிகை | மோகம் | ஓம் ஹூம் சிகாயை வஷட் |
| | 18. கவசம் | சின்மயம். | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 19. அஸ்த்ரம் | உவ்ஷணீகம் | ஓம் ஹ: அஸ்த்ராய ஹூம் பட் |
| | 20. கவசவேஷ்டனம் | ஆன்மலீகம் | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 21. பரமீகரணம் | நமஸ்காரம் | ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் |
| | 2. அங்க நியாசம் | | |
| | 1. தேகசோதனை | சாணம் | ஓம் ஹ : அஸ்த்ராய பட் |
| | 2. அமிர்தப் பிலாவனம் | நமஸ்காரம் | ஓம் ஹௌம் சக்தயே வௌஷட் |
| | 3. சிவாசனம் | திவ்வியம் | ஓம் ஹாம் சிவாஸனாய நம : |
| | 4. சிவமூர்த்தி | ஷெ | ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம : |
| | 5. சிவத்தியானம் | ஷெ | |

| | | | |
|---|---|---|---|
| | 6. மூர்த்தா | உஷ்ணீகம் | ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம: |
| | 7. வக்த்ரம் | சின்மயம் | ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம: |
| | 8. இருதயம் | மோகம் | ஓம் ஹூம் அகோர இருதயாய நம: |
| | 9. குஹ்யம் | திவ்வியம் | ஓம் ஹிம் வாமதேவகுஹ்யாய நம: |
| | 10. சாநு | ஆக்கிரம் | ஓம் ஹம் சத்யோஜாத முர்த்தயே நம: |
| | 11. வித்தியா தேகம் | திவ்வியம் | ஓம் ஹாம் ஹௌம் வித்யா தேகாய நம: |
| | 12. நேத்ரம் | நேத்திரம் | ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம: |
| | 13. சிவமூலம் | திவ்வியம் | ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: |
| | 14. சிவத்தியானம் | ஷை | |
| | 15. இருதயம் | ஆக்கிரம் | ஓம் ஹாம் இருதயாய நம: |
| 6. சகளீ காணம். | 16. சிரசு | திவ்வியம் | ஓம் ஹீம் சிரசே சுவாஹா |
| | 17. சிகை | மோகம் | ஓம் ஹூம் சிகாயை வஷட் |
| | 18. கவசம் | நாராசம் | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 19. அஸ்த்ரம் | உஷ | ஓம் ஹ: அஸ்த்ராய பட் |
| | 20. தாளத்திரயம் | கோவிடானம் | ஷை |
| | 21. திக்குப் பந்தனம் | சோடிகை | ஷை |
| | 22. கவச வேஷ்டனம் | அதிதீட்சணம், | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 23. பரமீகரணம் | மகாமுத்திரை | ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் |
| | 24. ஏகீபாவம் | | |

1. பிராணயாமம்

| | | | |
|---|---|---|---|
| | 1. நாடி சோதனை | வராகம் | ஓம் ஹ: அஸ்த்ராய பட் |
| | 2. பூரகம் | ஷை | நமோந்த சங்கிதா மந்திரம் |
| 7. உயிர்ச்சுத்தி. | 3. கும்பகம் | ஷை | ஷை |
| | 4. இரேசகம் | ஷை | ஷை |
| | 5. கர சுத்தி | பதாகை | ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: |

| பெயர். | கிரியை. | முத்திரை. | மந்திரம். |
|---|---|---|---|
| | 2. சிவ தீர்த்தகரணம் | | |
| | 1, சிவாமிர்தாகிர்ஷணம் | அங்குசம் | ஓம் ஹாம் ஹௌம் இருதயாய வௌஷட் |
| | 2. சிவாமிர்தஸ்தாபனம் | கும்பம் | ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம : |
| | 3. திக்குப்பந்தனம் | சோடிகா | ஓம் ஹ : அஸ்த்ராய பட் |
| | 4. அவகுண்டனம் | அதிதீட்சணம் | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 5. தேனு முத்திரை | தேனு | ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் |
| | 3. சந்தியாத்தியானம் | | |
| | 1. காலை-பிராமி | | |
| 7. உயிர்ச் சுத்தி. | 2. உச்சி-வைணவி | | |
| | 3. மாலை-இரௌத்திரி | | |
| | 4. மந்திராபிடேகம் | | |
| | 1. வலக்கரத்தால் இடக் கரத்தில் நீர் விட | | ஓம் ஹாம் இருதயாய நம : |
| | 2. அபிமந்த்ரணம் | கும்பம் | நமோந்த சங்கிதை I. |
| | 3. அபிடேகம் | ௸ | ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட் |
| | 5. மார்ச்சனம் | | |
| | 1. ஜலாபி மந்த்ரணம் | அப்யுட்சணம் | நமோந்த சங்கிதை 1. |
| | 2. வலக்கரத்தால இடக் கரத்தில் நீர் விட | | ஓம் ஹாம் இருதயாய நம : |
| | 3. புரோட்சணம் | திருமுத்திரை | தனித்தனியாக வௌஷடந்த சங்கிதை. 11 |

6

| | | | |
|---|---|---|---|
| | 6. அகமர்ஷணம் | | |
| | 1. கர்ம சோதனை | வராகம் | |
| 7 உயிர்ச்சுத்தி. | 2. கர்ம தகனம் | ஊர்த்துவமுகி | ஓம் ஹ : அஸ்த்ராய ஹூம் பட் |
| | 3. கரசுத்தி | | ஓம் ஹ : அஸ்த்ராய பட் |
| | 7. ஆசமன சகளீகரணம் | | |
| | 1. கவசவேஷ்டனம் | நிமிர்த்திய பதாகை | ஓம் ஹைம் கவசாய வௌஷட் |
| | 2. சதாசிவத்தியானம் | | |
| | 3. காயத்திரி தர்ப்பணம் | சங்கம் | சிவகாயத்திரி |
| | 4. 1. சிவமூல மந்திரம் 3 | ஷை | சுவாகாந்தமூலம் |
| | 2. ஷை செபம் 10 | | |
| | 3. ஷை தர்ப்பணம் 1 | ஷை | ஷை |
| | 5. சங்கிதாமந்திரம் | ஷை | சுவாகாந்த சங்கிதை தனித்தனியாக 11 |
| | 6. சர்வமந்திரம் | ஷை | ஓம் ஹாம் சர்வேப்யோ மந்த்ரேப்ய சுவாஹா |
| | 7. சர்வதேவர் | ஷை | ஓம் ஹாம் சர்வேப்யோ தேவேப்ய சுவாஹா |
| | 8. சர்வ இருடிகள் | திருமுத்திரை | ஓம் ஹாம் சர்வேப்யோ ரிஷிப்யோ நம: |
| | 9. சர்வ மனிதர் | சபா | ஓம் ஹாம் சர்வேப்யோ மனுஷ்யேப்யோ வஷட் |
| 8. தருப்பணம். | 10. சர்வ பூதர் | பணமுத்திரை | ஓம் ஹாம் சர்வேப்யோ பூதேப்யோ வௌஷட் |
| | 11. சர்வபித்ருக்கள் | கண்டி | ஓம் ஹாம் சர்வேப்யோ பிதுர்ப்ய சுவதா |
| | 12. சர்வ ஞாதிகள் | துருவ | ஓம் ஹாம் சர்வேப்யோ ஞாதிப்ய சுவதா |
| | 13. சர்வ ஆசாரியர் | செகண்டி | ஓம் ஹாம் சர்வேப்யோ ஆசார்யேப்ய சுவதா |
| | 14. கணபதி | சங்கம் | ஓம் ஹாம் கணபதியே சுவாஹா |
| | 15. ஸ்கந்தர் | ஷை | ஓம் ஹாம் ஸ்கந்தாய சுவாஹா |
| | 16. தேவி | ஷை | ஓம் ஹாம் தேவியை சுவாஹா |
| | 17. நந்தி | ஷை | ஓம் ஹாம் நந்திநே சுவாஹா |
| | 18. மகா காளர் | ஷை | ஓம் ஹாம் மகா காளாய சுவாஹா |
| | 19. பிருங்கி | ஷை | ஓம் ஹாம் பிருங்கிணே சுவாஹா |

| | | | |
|---|---|---|---|
| | 20. விருபன் | ஷை | ஓம் ஹாம் விருபாய சுவாஹா |
| 8. தருப்பணம். | 21. சண்டன் | ஷை | ஓம் ஹாம் சண்டாய சுவாஹா |
| | 22. ஆசமன சகளீகரணம் | | |
| | 1. தீர்த்தோப சங்காரம் | அங்குசம் | ஓம் ஹம் இருதயாய வௌஷட் |
| | 2. சூரியோபஸ்தானம் | | |
| | 1. மந்திர ஜெபம் | சங்கம் | நமோந்த சங்கிதை |
| 9. சூரியோப ஸ்தானம். | 2. அநுட்டான பல சமர்ப்பணம் | ஷை | ஓம் ஹாம் ஹௌம் சிவாய சுவாஹா |
| | 3. சூர்ய தர்ப்பணம் | ஷை | ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸ: சிவ சூர்யாய சுவாஹா |
| | 3. ஆசமனம் | | |
| | 1. கணபதி குருவந்தனம் | | |
| | 2. பிராணயாம சகளீகரணம் | | |
| | 3. சதாசிவத்தியானம் | | |
| | 4. சிவகாயத்திரி | | |
| 10. சேப நிவேதனம். | 5. சிவமூலம் 108 | | |
| | 6. சங்கிதை 1 | | |
| | 7. தேவி மூலம் 10 | | |
| | 8. கணபதி மூலம் 10 | | |
| | *9. ஸ்கந்தன் மூலம் 10 | | |
| | 10. அகோரம் 21 | | ஓம் ஹூம் அகோராய நம: |
| | 11. கணபதி குருவந்தனம் | | |
| | 12. பிராணயாம சகளீகரணம் | | |

* இதன் பிறகு இஷ்டமான மந்திரங்களை வேண்டுமளவு செபிக்கலாம்.

11. தோத்திரம்.

1. சிவப்
    1. தேவாரம்
    2. திருவாசகம்
    3. திருவிசைப்பா
    4. திருப்பல்லாண்டு
    5. பெரிய புராணம்
    6. இஷ்ட தோத்திரம்

1. சத்தி
2. கணபதி
3. கந்தன்
4. நந்தி
5. சமயகுரவர்
6. அறுபத்து மூவர்
7. சேக்கிழார்
8. சந்தான குரவர்
9. தாதார குரு (தனது குரு)
10. அஷ்டதிக்குப் பாலகர் வணக்கம்
11. ஆன்மப் பிரதட்சிணம்
12. நமஸ்காரம்
13. ஆசமனம்
14. பூமிதேவி வணக்கம்.

---

## விசேஷ தர்ப்பணம்.

### தேவகண தர்ப்பணம். (சங்கமுத்திரை)

ஓம் ஹாம் ஆதித்யேப்பஸ்வா :
ஓம் ஹாம் வசுப்யஸ்வா :
ஓம் ஹாம் ருத்ரேப்யஸ்வா :
ஓம் ஹாம் விஸ்வேப்யஸ்வா :
ஓம் ஹாம் சாத்யேப்யஸ்வா :
ஓம் ஹாம் மருத்ப்யஸ்வா :
ஓம் ஹாம் ப்ருகுப்யஸ்வா :
ஓம் ஹாம் அங்கிரேப்யஸ்வா :

### இருடிகள் தர்ப்பணம். (திருமுத்திரை)

ஓம் ஹாம் அத்ரயே நம :
ஓம் ஹாம் வசிஷ்டாய நம :
ஓம் ஹாம் புலஸ்த்யாய நம :
ஓம் ஹாம் க்ரதவே நம :
ஓம் ஹாம் பாரத்வாஜாய நம :
ஓம் ஹாம் விஸ்வாமித்ராய நம :
ஓம் ஹாம் பிரசேதசே நம :
ஓம் ஹாம் ருசகாய நம :
ஓம் ஹாம் அகஸ்த்யாய நம :
ஓம் ஹாம் ததீசயே நம :
ஓம் ஹாம் துர்வாஸே நம :

### மனுஷ்ய தர்ப்பணம். (சபாமுத்திரை)

ஓம் ஹாம் சனகாயவஷட்
ஓம் ஹாம் சனந்தாயவஷட்
ஓம் ஹாம் சனுதனுயவஷட்
ஓம் ஹாம் சனத்குமாராயவஷட்
ஓம் ஹாம் கபிலாயவஷட்
ஓம் ஹாம் பஞ்சசிகாயவஷட்
ஓம் ஹாம் ருஷபேவஷட்

### பூத தர்ப்பணம். (பணுமுத்திரை)

ஓம் லம் பிருதிவிபூதாய வௌஷட்
ஓம் வம் ஆப்யபூதாய வௌஷட்
ஓம் ரம் தேயுபூதாய வௌஷட்
ஓம் யம் வாயுபூதாய வௌஷட்
ஓம் ஹம் ஆகாயபூதாய வௌஷட்

### தேவ பித்ருக்கள் தர்ப்பணம். (கண்டி முத்திரை)

ஓம் ஹாம் கவ்யவாகாயஸ்வதா
ஓம் ஹாம் அனலாயஸ்வதா

ஓம் ஹ்ராம் சோமாயஸ்வதா (கண்டி முத்திரை)
ஓம் ஹ்ராம் யமாயஸ்வதா
ஓம் ஹ்ராம் அர்யம்ணேஸ்வதா
ஓம் ஹ்ராம் அக்னிஷ்வாக்தாயஸ்வதா
ஓம் ஹ்ராம் பரிகிஷிப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் ஆஜ்யபாயஸ்வதா
ஓம் ஹ்ராம் சோமபாயஸ்வதா

விசேஷ பித்ருக்கள் தர்ப்பணம். (கண்டி முத்திரை)

ஓம் ஹ்ராம் ஈசாயபித்ரேஸ்வதா
ஓம் ஹ்ராம் சதாசிவாய பிதாமகேப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் சாந்தாய ப்ரபிதாமகேப்யஸ்வதா

பிரேத பித்ருக்கள் தர்ப்பணம். (கண்டி முத்திரை)

ஓம் ஹ்ராம் பிதாபித்ருப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் பிதாமகேப்பஸ்வதா
ஓம் ஹ்ராம் பிரபிதாமகேப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் மாத்ருப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் பிதாமகீப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் ப்ரபிதாமகீப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் மாதாமகேப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் மாதுபிதாமகேப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் மாதுப்ரபிதாமகேப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் மாதாமஹீப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் மாதுபிதாமகீப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் மாதுப்ரபிதாமகீப்யஸ்வதா [திரை)
ஓம் ஹ்ராம் சர்வேப்யோ ஆசார்யேப்யஸ்வதா (செகண்டி முத்
ஓம் ஹ்ராம் சர்வேப்யோ ஞாதிப்பஸ்வதா (துருவ முத்திரை)
ஓம் ஹ்ராம் சர்வேப்யோ பித்ருப்யஸ்வதா (கண்டி முத்திரை)
ஓம் ஹ்ராம் திக்ப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் திக்பதிப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் சித்தேப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் மாத்ருப்பஸ்வதா
ஓம் ஹ்ராம் க்ரகேப்யஸ்வதா
ஓம் ஹ்ராம் நக்ஷத்ரேப்யஸ்வதா

சிவமயம.

# அருஞ்பதப் பொருள்.

அகம்=பாவம்.

அகமர்ஷணம்=பாவத்தைக் கெடுத்தல்.

அங்கம்=உறுப்பு.

அஞ்சலி=வணக்கம்.

அதரம்=உதடு.

அப்புக்ஷணம்=மூடுதல்.

அவகுண்டனம்=சுற்றுதல்.

ஆசமனம்=உறிஞ்சுதல்.

ஆசாரியன்=சமயம் விசேடம் நிருவாணம் ஆசாரிய வபிடேக மெனும் சம்ஸ்காரங்களைப் பெற்று, சரியை கிரியை யோகம் ஞானம் எனும் நான்கு சாதனங்களையும் உடையவன்

ஆயாமம்=தடுத்தல்.

இரட்சை=காப்பு.

இரேசகம்=வெளியில் விடுதல்.

உச்சாடனம்=ஏவுதல், அகற்றல்.

உபசங்காரம்=ஒடுக்குதல், மீட்டும் ஒடுக்குதல்.

உபஸ்தானம்=சார்ந்த இடம்.

உபாசனை=வழிபாடு.

ஏகீபாவம்=ஒன்றாகப் பாவித்தல்.

காணம்=செய்தல்.

கவசம்=மூடி, காப்பு.

கும்பகம்=அசைவற நிறுத்தல், ஸ்தம்பித்தல்.

குஹ்யம்=இரகசியம், மறைவு.

சகளம்=வடிவு.

சகளீகரணம்=வடிவு செய்தல்.

சங்கிதை=தொகுப்பு, சேர்ந்தது.

சந்தியா=சம்+தியா, சம்=செவ்வே, தியா=தியானித்தல்.

சந்தியா வந்தனம்=செவ்வையாகத் தியானித்து வழிபடல்.

சமயி=சமயதீட்சையை யுடையவன்.

சாதகாசாரியன்=சிகாச்சேதமின்றி நிர்வாண தீட்சையைப் பெற்றிருப்போன், இவன் உலோக தர்மணி தீட்சிதன் எனவும் பெயர் பெறுவன்.

சிவதர்மணி தீட்சிதன்=சிகாச் சேதத்தோடு கூடிய நிர்வாண தீட்சையைப் பெற்றவன்.

சிவ தீர்த்தகரனம்=சிவ தீர்த்தமாகச் செய்தல்.

சுவதா=கொடுத்தல்.

சுவாஹா=அழைத்தல்.

ஞாதி=தாயாதி, சுற்றம்.

தருப்பணம்=உவப்பித்தல்.

தாடனம்=தட்டுதல்.

திரிபுண்டரம்=மூன்றுகுறி. மூன்று இரேகை.

தேனு முத்திரை=பசுவின் (காமதேனுவின்) முலைபோன்ற [முத்திரை.

நம:=நமஸ்கரித்தல்.

நியாசம்=பதித்தல்.

நிரீக்ஷணம்=பார்த்தல்.

நிவேதனம்=ஒப்புவித்தல். கொடுத்தல்.

பட்=படுத்தல். அழித்தல்.

பந்தனம்=கட்டு.

பஸ்பம்=விபூதி, நீறு

பிராணாயாமம்=பிராணவாயுவைத் தடுத்தல்.

புண்டரம்=இரேகை.

புரோக்ஷணம்=தெளித்தல்.

பூரகம்=உள்ளிழுத்தல், உட்கொள்ளுதல்.

மந்திரம்=நினைப்பவனைக் காப்பது.

மர்ஷணம்=கெடுத்தல்.

மார்ச்சனம்=சுத்தி செய்தல், துடைத்தல்.

முஷ்டி=கைப்பொத்து

முத்திரை=அடையாளம், அறிகுறி.

மூர்த்தா=உச்சி.

வக்த்ரம்=முகம்.

வந்தனம்=வழிபாடு.

வஷட்=விடுதல்.

வேஷ்டனம்=சுற்றுதல்.

வௌஷட்=அசைவின்றி யிருத்தல்.

ஹூம்=கட்டல், சவனப் படல்.

உ

சிவமயம்.

பஞ்சாக்ஷரபுரம்

உயர்திரு

# வாலையானந்த சுவாமிகளால்

## வெளியிடப் பெற்றவை.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சித்தாந்தப்படமும், சித்தாந்தப்பட விளக்கமும் | 4 | 0 | 0 |
| சிவஞானபோதச் சுருக்கம் காலிக்கோ | 0 | 12 | 0 |
| ஷி ராப்பர் | 0 | 10 | 0 |
| சைவாநுட்டான விதி (இதில் அநுட்டான முத்திரா லட்சணமும், முத்திராலட்சணமும், முத்திரைகளின் படங்களும் சேர்ந்திருக்கின்றன.) | 1 | 8 | 0 |
| தத்துவ விளக்கச் சுருக்கம் | 0 | 3 | 0 |
| துகளறுபோதக் கட்டளை | 0 | 2 | 6 |
| சிவனடியார் திருக்கூட்டம் | 0 | 3 | 0 |
| சிவஞானபோதச் சூரணிக்கொத்து | 0 | 0 | 6 |

(வி. பி. சார்ஜ் தனி)

---

கிடைக்குமிடங்கள்:—

சோல்டன் அண்ட் கோ,
திருவல்லிக்கேணி,
சென்னை.

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
நெ-56, தஞ்சாவூர் ரோட்,
திருச்சிராப்பள்ளி.

வாலையானந்த சுவாமிகள்,
சித்தாந்த நிலையம்,
கொரடாச்சேரி. P. O.
தஞ்சை ஜில்லா.